ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப் பிரதி விலை | வெளி நாடு 0-1-6 / உள் நாடு 0-1-0

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன்பணம் — | ரூ. 3—0 |
| 6-மாத சந்தா ,, — | ,, 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு.

ஆசிரியர் ஈ. வே. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | ஈரோடு, சுக்கில ௵ தை ௴ 20௳ (2—2—1930) ஞாயிற்றுக்கிழமை | மலர் 36

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் சிங்காரம் அவர்களின்

# மிகவும் குணமுள்ள மருந்துகள்.

[ஓர்யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார்செய்யப்பட்டது.]

உலகப் பிரசித்தி பெற்ற

## மஹா சந்தனாதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு. கண்ணில் நீர்வடிதல், கண் பூ. பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருதலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டை குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டை சூடு, தேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4. 12 அவுன்ஸ டின் ரூ. 2—2—0

## சலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கைகால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விருத்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் உண்டாக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும்; சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

## மகா வில்வாதி லேகியம்.

அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீர்ணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை கால் குடைச்சல் முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

## அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, நீர் தாரவுகளையும் போக்கும்.

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

## குழந்தை மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை பாட்டல் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா. 8. கரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் எல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,
தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

ரோஜா முத்தையா

# டெண்டர் நோட்டீசு.

1. அடியில் குறித்த வேலைகளுக்கு சீல் செய்த டெண்டர்கள் 10—2—1930 தேதி பகல் 12 மணிவரைக்கும் பெற்றுக்கொள்ளப்படும்.
2. ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி டெண்டர் செய்வதுடன் டெண்டருடன் அந்தந்த வேலைக்கு நேராக குறிப்பிட்டிருக்கும் டிபாசிட் தொகையை கஜானாவில் செலுத்தி கஜானா ரசீதை சேர்த்து அனுப்பவேண்டும்.
3. டெண்டரை கோயமுத்தூர் ஜில்லா போர்ட்டு இஞ்சினீருக்கு லகோடா செய்து கவரின் தலையில் வேலையின் பெயரை தெளிவாய் எழுதியனுப்புவேண்டும்.
4. எஸ்டிமேட்டு விதப்படியோ அல்லது ஷை விதத்திற்கு 100க்கு இவ்வளவு விதம் (பெர்செண்ட்டு) கம்மி என்றாவது டெண்டர் செய்யவேண்டுமே தவிர 100க்கு மேல் விதம் கேட்கக்கூடாது.
5. கன்ட்ரூக்ட்டு தஸ்தாவேஜுகளை ஜில்லா போர்டு இஞ்ஜினீர் ஆபீசில் பார்த்துக் கொள்ளலாம். ஷை யாரிடமிருந்து டெண்டர் பாரத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டியது.

கோயமுத்தூர் ஜில்லா போர்ட்டு
இஞ்ஜினியர் ஆபீஸ்
தே 22—1—30

ஜில்லா போர்ட்டு
இஞ்ஜினியர்
கோயமுத்தூர்

| | வேலைகளின் பெயர். | எஸ்டிமேட் தொகை ரூ. | டிபாசிட்டு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | மதுரூஸ் கள்ளிக்கோட்டை ரோட்டில் 327/3 லிருக்கும் பாலத்தை புதுப்பித்தல் ... | 6600 | 330 |
| 2. | மதுரூஸ் கள்ளிக்கோட்டை ரோட்டில் 327—6ல் ஒரு பாலம் கட்டுதல் ... | 4700 | 235 |
| 3. | மதுரூஸ் கள்ளிக்கோட்டை ரோட்டில் 334—2ல் ஒரு பாலம் கட்டுதல் ... | 9900 | 495 |
| 4. | மதுரூஸ் கள்ளிக்கோட்டை ரோட்டில் 337—1ல ஒரு பாலம் கட்டுதல் ... | 5000 | 250 |
| 5. | திருச்சினாப்பள்ளி கோயமுத்தூர் ரோட்டில் 105—1ல் ஒரு பாலம் கட்டுதல் ... | 2000 | 100 |
| 6. | திருச்சினாப்பள்ளி கோயமுத்தூர் ரோட்டில் 106—7ல் ஒரு பாலம் கட்டுதல் ... | 6750 | 340 |
| 7. | கோயமுத்தூர் உதகமண்டலம் ரோட்டில் 8—8ல் ஒரு கல்வர்ட்டு கட்டுதல் ... | 5500 | 275 |
| 8. | கொயமுத்தூர் உதகமண்டலம் ரோட்டில் 13—1ல் ஒரு பாலம் கட்டுதல ... | 9700 | 485 |
| 9. | கோயமுத்தூர் ஹாசனூர் ரோட்டில் 28—5ல் ஒரு பாலம் கட்டுதல் ... | 6300 | 315 |
| 10. | கோயமுத்தூர் ஹாசனூா ரோட்டில் 28—7ல் ஒரு பாலம் கட்டுதல் ... | 5500 | 275 |

## பினாங்கு ஜனாப் மகமட் யூசப் அவர்களின் ஈபோ மகாநாட்டில் ஈ. வெ. ராமசாமியாரின் உருவப்பட திரப்பு பிரசங்கம்.

அன்பு நிரைந்த தலைவரவர்களே! சகோதரர்களே! இன்று நமது ஈ. வி. ராமசாமிப் பெரியாரின் திரு உருவப் படத்தைத் திரந்து வைக்கும்படி எனக்கு வரவேற்பு கழகத்தார் பாக்கியம் அளித்ததற்காக எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

நமது பெரியாரின் படத்தை திறந்துவைப்பதற்கு முன்பாகவே யெவ்வளவோ சிரமங்களுக்கிடையில் அவர்களை பத்தினியுடனும் துணைவர்களுடனும் அழைத்து வந்து தங்களின் நேரிலேயே காண்பித்துவிட்டோம். இருந்தாலும் அவர்களின் ஞாபகார்த்தமாக இந்தப்படத்தைத் திரந்து அதை நாம் இங்கேயேவைத்துக் கொண்டிருக்கவேண்டியது மிக்க அவசியமாகும்.

அவர்களின் உயர்வைப்பற்றி நான் எடுத்துச்சொல்வதானால் அது தன் வீட்டுப்பெருமையை உடன் பிரந்தாருக்குச் சொல்வது போலாகும்.

இன்று எனக்குத்தெரிந்த வரையில் இந்தியாவிலோ அல்லது தென்னாட்டிலோ உண்மையான தியாகிகள் உண்டா வென்று கேட்கப்பட்டால் நமது பெரியாரைத் தவிர உண்மையான உழைப்பாளியும் தியாகியும் இல்லை என்றே நான் சொல்லுவேன்.

காரணம் நமது தலைவர் அவர்கள் இன்றைக்கே சுகமாக வீட்டில் இருக்கவேண்டுமென்று நினைத்தால் ஒரு அரசனைப்போல அழகிய மாளிகையில சுகபோகியாய் அமர்ந்து வாழலாம்.

அதை விடுத்து அல்லும் பகலும் பாமர மாக்களுக்கும் தாழ்த்தப்பட்டாருக்கும் தொண்டு செய்வதே தனது நோக்கமென எண்ணி உழைப்பது எவ்வளவு தியாகமென்பதை நீங்களே அறிந்து கொள்ளுங்கள். அவர்கள் இது வரைக்கும் செய்த தொண்டின் மூலம் எவ்வளவு பயன் கிடைத்தது என்பது எல்லாருக்கும் தெரிநத விஷயமே.

எல்லாநாட்டிலும் கேவலமாய் நடத்தப்பட்ட திருவனந்தபுரம் (மலையாளம்) நம் தலைவரின் உழைப்பால் முன்னேறி விழிததுக் கொண்டது.

நமது தலைவரின் ஆயுதமான இங்கிலீஷ் ரிவோல்ட் பத்திரிகையால் வட இந்திய நாடுகள் கண் விழித்து வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. இனனும் இன்னும் 10 வருடத்துக்குள் நம் தேயத்தில் சமத்துவம் சகோதரத்துவம் சிறந்து விளங்கு மென்பதில் சந்தேகமில்லை.

இம்மாதிரி தீவிர உழைப்பில் ஈடுபட்டவர்களுக்கு எதிர்ப்புகள் ஏற்படாமல் இல்லை. ஆப்கன் அமீர் அமானுல்லாகான் தன்னாட்டுக்கு உண்மை சீர்திருத்தம் செய்யப்போனதால் மக்களின் அறியாமையினால் தன்னரசு துறந்து அயல் நாடு யேகும்படியாயிற்று. ஆனபோதிலும் இப்போது அந்த நாடு ஜெனரல் நாதாகானல் அதே சீர்திருத்த அரசாங்கமாய் ஏற்படப் போகிறது.

பழைய கொள்கையிலேயே நோக்கமாய்க்கிடந்த துருக்கியை கமால்பாச்சா அவர்கள் தனது உழைப்பால் சுயெச்சையுள்ள நாடாகச்செய்துவைத்தார். அது இப்போது வலிமை பெற்ற நாட்டிலொன்றாய்விளங்குகின்றது அதுபோல் உழைத்து நம் நாட்டைச் சிறப்பித்துக்கொண்டு வர முயற்சிக்கும் நமது பெரியாரின் படத்தை எனது உள்ளம் பூரித்து அன்புடன் திறந்து வைக்கின்றேன் என்று சொல்லித் திரு. ராமசாமிப் பெரியாரின் படத்தை திறந்து வைத்தார்கள். ராமசாமியாருக்கு ஜே என்ற பெருத்த கோஷத்திடையே எல்லோரும் எழுந்து வணங்கினார்கள்.

## ருஷியாவில் உற்சவத்தடைகள்.

கிறிஸ்து பிறந்த நாள் பண்டிகையை கொண்டாடக் கூடாதென்று ருஷ்ய அரசாங்கத்தார் உத்திரவு போட்டதுடன் அதற்காக அரசாங்கத்திலிருந்து பணம் ஒதுக்கி வைத்து பிரசாரமும் செய்கிறார்கள்.

# ஸான்னித்தியம்.

(கைவல்யம்)

சென்னையில் கூடின சனாதன தரும மகா நாட்டில் "யுக்தாயுக்தமில்லாத ஆலயப் பிரவேசம் ஸான்னித்தியத்தைக்கெடுத்து விடு"மென்று தீர்மானம் பண்ணினார்கள். ஆனால் ஆலய தெரிசனைக்கு இன்ன விதமான யுக்தாயுக்தமிருக்கவேண்டும் இன்ன யுக்தாயுக்தமில்லாதால் ஸான்னித்தியம்கெட்டுவிடும், இந்த யுக்தாயுக்தத்தால் ஸன்னிதானம் கெடாது என்பதை விபரப்படுத்திச் சொல்லியிருந்தார்களானால் கோவில் நுழைதலுக்குள்ள யுக்தாயுக்தங்களும் ஸன்னித்யத்தைக்கெடுக்கும் யுக்தாயுக்தங்களும் கெடுக்காயுக்தாயுக்தங்களும்சனசமூகங்களுக்குத் தெரிந்திருக்கும். அதைக்கொண்டு ஆலயப்பிரவேசத்திற்கும் ஸான்னித்தியம் கெடாமலிருப்பதற்கும் சனாதன தருமிகளிடம் யுக்தாயுக்தம் எவ்வளவு நிறைந்திருக்கின்றனவென்பதும் தாழ்த்தப்பட்டவர்களிடம் எவ்வளவு குறைந்திருக்கிறதென்பதும் சனங்களுக்கு விளங்கியிருக்கும்.

அதைக் "குடி அரசு" சாஸ்திரத்திற்கும் உங்கள் முன்னால் நிற்கும் உலக அனுபவத்திற்கும் ஒத்த நியாயங்களால் சொல்லுவதை ஆலோசித்துப்பாருங்கள். நியாயமென்றுபட்டால் அங்கீகரியுங்கள், இல்லையானால் நீங்களே கொடுத்தலும் பெறுதலுமல்லவோ உலக வாழ்க்கையின் மர்மம் என்பதை நினைவிற்குக் கொண்டுவாருங்கள். நமது பண்டிதர்களும் சாஸ்திரிகளும் இருபொருள் கொண்ட வாசகங்களைக் கூறி வீண் கதைகளை உண்மைகளெனக்கொண்டு தர்க்கித்து பக்தியிலும், பூசையிலும், ஆசாரத்திலும் இருந்தாலும் அவர்களுக்குள் நியாயம், சத்தியம் தெரிந்தவர்கள் கூட குறுகிய மனதினாலோ லௌகீக பயத்தாலோ உண்மையை மறைத்து வைப்பது பாவமாகும். நமது மத உண்மைக்கும் அதற்குப் பலன் கொடுக்கும் தெய்வ சந்நிதிக்கும் ஆசைகொண்டிருப்பவர்களுக்கு ஆதரவு அளிக்காத சாஸ்திரக்கருத்தும் சாஸ்திரியத்தன்மையும் இருப்பதால் அது தெய்வப் பிரீதியாகாது.

வீடு வாசல், ஊண், உடை, பணி, பணிதல், பணிக்கன், பண் முதலியவைகளெல்லாம் மாறிவிட்டன நாம் வளர்க்கும் பசு, நாய், கோழி, குருவி முதலியவைகள் கூடவேறு ஜாதியாக மாறிவிட்டதே. நமது சமூகத்தில் நம்மைப்போலவே சரீரம் படைத்து உணர்ச்சி, எண்ணம்யாவும் ஒரேமாதிரியாகவுள்ள ஒரு சமூகத்தாரை ஆயுள் காலமெல்லாம்சந்ததிசந்ததியோடு கேவலமான வாழ்க்கை வாழ்ந்து அடிமையாகவிருக்குமாறு நிர்பந்தித்து அவர்கள் முன்னேற சாத்தியமில்லாமல் செய்வதில் எந்தத் தெய்வம் தான் நம்பேரில் திருப்தியடைகிறதென்று நீங்கள் நினைக்கிறீர்கள். கொடுத்தலும் பெறுதலுமல்லவோ உலக வாழ்க்கையின் மர்மமும் கடவுள் கட்டளையுமாம் என்பதை மறந்துவிட்டோம். நாம் வெளிநாட்டிற்குப் போய் வந்தாலும் கிணற்றுத்தவளையின் வாழ்க்கையை விட நம்மால் முடியவில்லை. இங்கிலீஷ் முக்குக்கண்ணாடியைப் போட்டுக்கொண்ட சனாதன தரும சபைக்குக்கூட இதில் பார்வை மங்கிவிட்டது. நமது சமயக்கொடுமைகளை விட்டு நாம் வியாபகமுற்று ஓங்கி வளர்ந்து நம்முள் ஜீவகட்டளையைக் காட்டவேண்டும் இல்லாவிடில் இருந்தவிடத்திலேயே இருந்து வளர்ச்சியின்றிக் குன்றிக்குறைந்து அழுகி நாற்றமெடுத்து அழிய வேண்டியதேயன்றி வேறு வழியில்லை என்றே சுயமரியாதைச் சங்கத்தார்கள் சொல்லுகிறார்கள்.

தாழ்த்தப்பட்டவர்கள் தெய்வசந்நிதிக்குவந்தால் ஸான்னித்தியம் கெட்டுவிடுமென்று சனாதன தருமிகள் சொல்லுவதை கவனிப்போம். கடவுள் சன்னதியிலிருப்பது ஸான்னித்தியம் கடவுள் சந்நதியில் அருள் கிருபை, அனுக்கிரகமிருக்கும். தாழ்த்தப்பட்டவர்கள் அங்கு வந்தால் அவை கெட்டுப்போகாதென்று கீழ்க்கண்ட நியாயங்கள் உங்களுக்குத்தெரியப்படுத்தும்.

ஆன்மாக்கள் உற்பத்தி நாசரகிதமானவையென்பதும், இயல்பினாலேயே இரவாமை உடையன வென்பதையும் அருள் தூய்மை சர்வவியாபகத்துவம் சர்வஞ்ஞத்துவம் முதலிய குணங்கள் ஒவ்வோர் ஆன்மாவிலும் மறைந்திருக்கின்றன என்பதும் நமது சமயங்களின் நிச்சயம். இந்த பாவனையை ஒவ்வொரு இந்து சமயவாதியும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். எவ்வளவு துர்பலமாயும் துஷ்டவியல் பினதாயுமிருந்தாலும் மகத்தாயிருப்பினும் அற்பமாயிருப்பினும் மனிதருக்குள்ளும் பிராணிகளுக்குள்ளும் அந்தர்யாமியாய் இருப்பது சர்வவியாபகமாயும் சர்வஞ்ஞனமாயுமுள்ள அவ்வொரே பரமாத்மாவாம். வெளிக்குத்தோன்றும் பேதம் ஆன்மாவைச்சேர்ந்ததன்று. உபாதியைச் சேர்ந்ததாம். நமக்கும் அதிஅற்பமான பிராணிக்கும் உள்ள வேற்றுமை உபாதி சம்பந்தமானதேயன்றி வஸ்து சொரூபத்தை நோக்குங்கால் அதுவும் நாமும் ஒன்றே. ஒரே ஆத்ம சுரூபம் இதுவே நமது சமயத்தில் போதிக்கப்பட்ட சிறந்த தத்துவம். இந்த தத்துவத்தை எடுத்துச்சொல்லுகையில் நமது சமயமும் நமது புராதன ஆராய்ச்சிகளும் உலகத்திலுள்ள பெரும் அறிவாளிகளாலும் மதிக்கப்படுகின்றன. சுவாமி விவேகானந்தர்மேனாட்டாருக்குச் சொன்னதும் அதுவே சங்கராச்சாரியார் தத்துவ விசாரணையில் உயர்ந்தவர் என்று மதிக்கப்படுவதற்கும், பௌத்தர் ஜீவகாருண்யத்தில் மேலானவர் என்று சொல்லுவதற்கும், கீதை கடமையை உபதேசித்த நூலென்பதற்கும், ராமானுஜாச்சாரியார் கல்மஷம் மூடியிருந்த கர்மானுஷ்டானங்களைக் கூடியவரையில் சுருக்கப்படுத்த வந்த இரக்கமுடையவர் என்பதும் அந்த தத்துவத்தின் மகிமையாலேயே. நமது தேசத்தில் சர்வ சகோதரத்துவமென்பது மனிதரை மாத்திரம் சகோதரரெனக் கருதுவதுடன் அமையாமல் எறும் பீறாக உள்ள எல்லா உயிரையும் தம்முயிரைப்போல பாவிக்கும் சர்வஜீவகாருண்யமே சனாதனதர்மமெனப்படும். இந்த நீதியைக் காக்கப் பிராமணன் பிறர்தானையல்லாமல் விவஸ்தையின்றி உண்டு உடுத்தி உலகபோகங்களை அனுபவித்துக்கொண்டு ஸான்னியத்தைக் காப்பாற்றுவதற்கல்ல. அந்த சனாதன தருமத்தின் உண்மை தத்துவத்தைத் தெரிந்தோ தெரியாமலோ கிளிப்பிள்ளைகள் போல நமது சாஸ்திரிகளும், பண்டிதர்களும், பக்திமான்களும் பிரசங்கம் செய்கையிலும் பேசுகையிலும் ஜீவகாருண்யம் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் அதை ஆடுகோழிகளிடம் நிறுத்தி மனிதனிடம் காட்டாமல் உலகப் பொது விதியைப் பலர் உல்லங்கனம் செய்கிறார்கள். எது வந்து விடுமோ என்னும் அற்பத்தனமான பயமும் தன்னலம் வேண்டலும் அல்லது அற்பத்தனமான சூதினால் நேர் வழியை விட்டு குருட்டச்சத்தால் மானுஷிக உரிமைகளைப் புறக்கணிக்காதீர்களென்றே சாஸ்திரிகளையும் படித்தவர்களையும் பக்திமான்களையும் சுயமரியாதைச் சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

எல்லாம் ஆத்மசுரூபம் எல்லாம் சேர்ந்தது பரமாத்மா பரமாத்மாவே கடவுள். அப்படி இருக்கஎந்த ஆத்மா கடவுளண்டை வந்தாலும் கடவுளின் ஸான்னித்தியம் குறைவதற்கு ஹேதுவுண்டா? கடவுளின் சான்னித்தியம் குறையபடக்கூடியதுமன்று. சமுத்திரத்தில் எல்லாச்சாக்கடைகளும் வந்து விழுகின்றன சமுத்திரத்தின் உப்பு குறைந்ததுண்டா? யுக்தா யுக்தமில்லாதவர்களை யுக்தப்படுத்த கடவுள் சன்னதியே ஒழிய யுக்தமுடையவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் வருணாசிரமிகள் வயிர்வளர்ப்பதற்கு அல்லவே சந்நிதி. யுக்தமுள்ளவர்களுக்கு சந்நிதி அவசியமுமில்லை. திருடனுக்குத்தானே ஜெயில். பையன்களுக்குத்தானே பள்ளி. நோயாளிகளுக்குத்தானே வைத்தியசாலை வேண்டும். நோயில்லாமல் திடகாத்திரமுடையவனுக்கு நோய்வராமலிருப்பதற்குவைத்தியனுடையஉபதேசம்வேண்டியிருந்தாலும்வியாதியுடையவனுக்கு தானே வைத்தியசாலையும் வைத்தியனும் அவசியமாகவேண்டும். வைத்தியனும் நோயில்லாதவனும் ஆஸ்பத்திரியில் நிறைந்து கொண்டு வியாதிஸ்தனுக்கு ஆஸ்பத்திரியில் இடம் கொடுக்காது வைத்தியும் செய்தால் வைத்தியசாஸ்திரம் குறைந்து வைத்தியத்தின்பலம் கெட்டுவைத்தியனும் நோயாளியும் நரகத்திற்குப் போவான் என்பது ஞாயமாகுமா? அதுபோல கடவுள்பக்தியில் கரை கண்டவர்களும் நாராயணபஜனை பண்ணும்பாகவத கோஷ்டிகளும்வேதத்திலுள்ள காயத்திரி மந்திரரகசியங்களைத் தெரிந்து கடவுளுக்கு முதற் பிள்ளைகளாகி அவருக்குப்பிரதிநிதியுமாகவிருக்கும் பிராமணர்களும் சன்னதியில் நிறைந்து கொண்டு பக்தியில்லாதவனுக்கு பக்தி வரவும் மூடனுக்கு அறிவு வரவும் கடவுளைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையுடையவனுக்கு திருப்தி வரவும் செய்யாமல் இவர்கள் வந்தால்கடவுளுக்குள்ள சான்னித்தியம் கெட்டுவிடும் சமயமே தொலைந்துவிடுவென்பது ஞாயமாகுமா?

எவ்வளவு தாழ்த்தப் பட்டவனுக்கும் வைத்தியசாலையில் இடம் கொடுத்தால் அங்குள்ள படுக்கை இடம் கொடுக்கும் பங்கா ஆடும் விளக்கு எரியும் அவனுடைய தேக அமைப்பும் வியாதியின் கூறும் ஆயுர் வேதம், சிந்தாமணி, யுனானி, இங்கிலீஷ் முதலிய வைத்திய சாஸ்திரங்களில் அடங்கினதாகவே இருக்கும். இவர்களிடமிருந்து வைத்தியர்களுக்குக் கிடைக்கும் அனுபோகமே வைத்தியனுக்கு வைத்தியத்தில் நம்பிக்கையும் அதன் உண்மையில் பல ரகசியங்களையும் தெரிந்துகொள்ளஏதுவாகவிருக்கிறது இவர்களுடைய தேகக்கட்டும் சகிக்கும் தன்மையும் வைத்திய சாஸ்திரத்திற்கு ஏதுவாக இருந்திருக்கின்றது. அது போல கடவுளைத்தெரிசிக்க வேண்டுமென்னும் ஆசையோடு வருகிறவனுக்கு இடம் கொடுத்தால் அவன் பகதியிலும் வைராக்கியத்திலும் நமது கடவுளுக்கும் பெருமையுண்டாகும். சமயமும் வியாபிக்கும்.

பீச்சோரம் யார் போனாலும் சமுத்திரக்காற்று அடிக்கிறது. சமுத்திரத்தின் ஸன்னித்தியம் கெடுவதில்லை. சூரியனை யார் பார்த்தாலும் அதன் கிரணங்கள் மேல் படுகின்றன அதன் ஸான்னித்தியம் கெடுவதில்லை. கெங்கையில் யார் குளித்தாலும் நனைத்துவிடுகிறது நெருப்பை எவர் தொட்டாலும்சுடுகிறது மோட்டார் வண்டியில் யார் ஏறினாலும் ஓடும் ஆகாசக்கப்பலில் யார் உட்கார்ந்தாலும் அது பறக்கும் எந்த மனிதனாலும் இவைகளுடைய ஸான்னித்தியம் குறையவில்லை சூரியன் அஸ்தமிக்காத ராஜியத்தை யுடைய நமது சக்கரவர்த்தி ஜார்ஜ் அரசர் இரண்டு தரம் நமதுநாட்டிற்கு வந்தார் அப்போதுஅவருக்கு நமதுநாட்டுத்தாழ்த்தப்பட்டசமூகம் சமையல்காரர்களாகவும்பந்திவிசாரணைக் கர்த்தாக்களாகவுமிருந்து ஆக்கிப்படைத்து அதிக நாழிகை அவர் பக்கமே

[தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க]

# இதிகாசங்கள்.

## இராமாயாணம்—சுந்தரகாண்டம்

கட்டுரை—11

(திரு. சந்திரசேகரப்பாவலர்)

சருக்கம் 39முதல் 42முடிய

சீதை, "அனும! என்தாய் கொடுத்த இத்தலையணியை இராமன் அறிவர். இதை அவரிடம் தருவதோடு ஓர் நடக்கவேண்டுவனவற்றையும் சொல்" என்றாள். அனுமான் அவ்வாறே வாக்களித்துப் போகப் புறப்பட்டான். சீதை கண்ணீர் வடித்து. "நீ போய்விட்டால் எனக்குக் கதி யார்? இராமன் என்னை மீட்கும்படி நீயே செய்யவேண்டியது என்றாள். அனுமன், "அம்மா! இராமனை எதிர்க்க யாரால் முடியும்? என்று தேற்றினான். சீதை அவனைப் பிரிய மனமில்லாமல், ஒருவேளை நீ களைத்திருந்தால் ஒருநாள் இங்கே ஓர் மறைவிடத்தில் தங்கிப் போகலாம். நீ என் பக்கத்திலிருந்தால் கவலை யற்றிருப்பேன். நீ போய் இராமனை அழைத்துவருமுன் என்னுயிர் போனாலும் போகும். உன்னைப்பார்த்தபின் என் கவலை யொழிந்தது. நீ போய்விட்டால் பழையபடி துன்பம் அதிகமாக வருத்துமே. இராமனும் சேனைகளும் கடலைத் தாண்டி இங்கே எப்படி வருவர்.? என வினவினாள். அனுமான் "அங்குள்ள வீரர்கள் அனைவரும் என்னை மிஞ்சியவர்கள். இராமன் என் தோளிலேறி வருவான். ஆதலின் கவலை யொழிக என்றனன்.

சீதை, "இராமனைப் பிரிந்து அழியும் பயிர்போல் வாடும் என்னை ஆசை தீர இராமன் அணையும்படி செய்யவேண்டியது உன் கடமை. காக்கையின் கண்ணைப் பிடுங்கியதையும், என் கன்னத்தில் பொட்டழிய மனோ சிலையில் பொட்டிட்டதையும் அடையாளமாகச் சொல் இன்னும் ஒரு மாதம் உயிர் வைத்திருப்பேன். அதற்குள் வரவில்லையானால் உயிரை விடுவேன்" எனக் கூறினாள். அனுமான், "கட்டாயம் இராமன் விரைவில் வந்துவிடுவான். அவனுக்கு மிக்க விருப்பத்தைத் தரவல்ல வேறொரு அடையாளம் கூறு." என்றான். சீதை, "இவ்வளவே போதும்" என்றாள். பின் அனுமான் புறப்படத் தயாராயிருப்பதைக் கண்டு சீதை, "சூடாமணியையும் இவனையும் பிரிந்து எவ்வாறு பொறுப்பேன்?" என்று எண்ணி "இராமனை இங்கே சேர்ப்பது உன் கடமை அரக்கியர் என்னை வருத்துவதைச் சொல்." என்றாள். அனுமான் வடக்கே சென்றான்.

அனுமான், "சீதையைக் கண்டேன். இராவணனுடைய வலிமையை அறிதல் வேண்டும். அதற்குச் சண்டைதான் வழி. இந்த அசோக வனத்தை அழித்தால் இராவணன் தன் சேனைகளை என்னோடு போரிட அனுப்புவான்." என்று எண்ணி, அச் சோலையை அழித்து சேனையின் வருகையை எதிர் நோக்கி தோட்டத்தின் வெளிவாசலில் காத்திருந்தான்.

அரக்கியர் விழித்து அனுமனைக் கண்டு அஞ்சி சீதையை நோக்கி, "இவன் யார்? எங்கிருந்து எதற்காக வந்தான்? அவனோடு நீ என் பேசினாய்? என்ன பேசினாய்? அஞ்சாது கூறு?" என வினவினர். சீதை, இவன் யாரோ அறியேன். அரக்கர் செய்கை உங்களுக்கே தெரியும். நானும் இவனைக் கண்டு அஞ்சுகிறேன். இவன் ஒரு அரக்கனே போலும்!' என்றனள். அதைக் கேட்டு சிலர் ஓடினர். சிலர் இராவணனிடம் சென்று, "ஒரு குரங்கு நமது அசோக வனத்தில் வந்து சீதையோடு அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்தது. நாங்கள் கேட்டும் சீதை அதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. அது இராமனுடைய தூதனோ, அன்றி யாரோ? அது சீதை இருக்கும் இடம் தவிர ஏனைய இடங்களை அழித்துவிட்டது. அது சீதையோடு இரகசியமாகப் பேசினதுமன்றி நமது வனத்தையும் அழித்தது. ஆதலால் தக்கவாறு தண்டிக்கவேண்டும்" என்றனர். இராவணன் சினங்கொண்டு எண்பதினாயிரம் கிங்கரர்களை ஏவினான். அவர்கள் அனுமாரோடு சண்டை யிட்டனர். அனுமான் அவர்களைக் கொன்று வேறு யார் போருக்கு வருகின்றனர் என்று எதிர்பார்த்து வாசற்படியின் மேல் நின்றான். இது செய்தியைச் சில அரக்கர் இராவணனிடம் கூற அவன் சம்புமாலியை அனுப்பினான். இவற்றுள்,

சீதை அனுமனை நோக்கி, கண்ணீர் வடித்து, "உன்னைப் பிரிந்து எவ்வாறு பொறுப்பேன் இராமன் வருமுன் என்னுயிர் போனாலும் போகும். ஆதலால் நீ என்னிடம் ஒரு நாளாவது ஒரு மறைவிடத்தில் தங்கிப்போ. நீ போய்விட்டால் அதிகமாகத் துன்பம் வருத்தும் எனக் கூறிய பேச்சு ஆராயத் தக்கது. அவனுடைய ஆற்றல் முதலியவைகளை அறிந்த சீதை அவனை மறைவிடத்தில் தங்கிப் போகச் சொல்வானேன்?

திடீரென்று விழித்துக்கொண்டு சீதையும் அனுமனும் அந்தரங்கமாகப் பேசியிருந்ததைக்கண்டு அரக்கியர் அவனைப்பற்றிய உண்மையைக் காணுமாறு அவனிடம் வினவுகின்றனர், சீதையோ பொய் புகல்கின்றாள். முழு பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கின்றாள். இது செய்தியை அரக்கியர் ஓடிச்சென்று இராவணனிடம் தெரிவிக்கின்றனர். உலகமாதாவெனப் படும் சீதை பொய் புகல்கின்றாள். தன்னைத் துன்புறுத்துவர் என அஞ்சியோ அல்லது அனுமனைத் துன்புறுத்துவர் என அஞ்சியோ அவள் பொய் புகன்றாள் என்னில் பொய் பொய்யேயாமன்றோ? இது புரைதீர்ந்த நன்மை பயத்தலின்று இதைப்பற்றி மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் பக்கம் 167ல் "விவாக காலத்திலும் ரதி சமயத்திலும் பிராணனுக்கு ஆபத்து நேரும் பொழுதும்சிநேகிதனுக்காகவும் தன்தனம் முழுவதும் நஷ்டமாகும் பொழுதும் பொய்சொல்லுதல் பாதகமாகாதென்றபடி இவ்விதமாகச் சொல்லித் தப்பித்துக்கொண்டிருக்கலாம்" என எழுதுகிறார். இதனால் சீதை கூறிய பொய்ம்மை அறிஞர் சிந்தையிற்றைக்கின்றது என்பது உறுதியாம்.

சீதை வெட்கமில்லாமல் அனுமனிடம் "இராமன் என்னைவந்து அணையும்படி செய்யவேண்டியது உன் கடமை" என்று கூறுகிறான். இவ்வாறு ஒரு பெண் கூறியிருப்பாளா? இனி கம்பர் போக்கைக் காண்பாம்.

மேலே சீதைக்கும் அனுமனுக்கும் நடந்த பேச்சைக் கம்பர் முற்றிலும் கூறவில்லை. அவர் சீதை அனுமனை நோக்கி என்றும் வாழ்வாய் எனக் கூறியதாகக் கூறுகிறார். இதுகொண்டு அறியா உலகம் மயங்கி என்றும் அழியாமல் இன்றும் இருப்பவன் எனக்கூறுகின்றது. இம்மயக்குரைக்கு ஒருவகையாகக் கம்பரே காரணம்.

அனுமான் சீதையைப் பிரிந்து சிந்தித்தவற்றுள் ஒன்று அவன் மண்டோதரியை இராவணன் காணக் குழல் பிடித்திழுத்து சிறைவைப்பல் என்பது எனக் கம்பர் கூறுகிறார். (பொழிலிறுத்தப்படலம் 4) இது வால்மீகி யாண்டும் கூறுததே. இது கம்பர் செய்யுளாயின் அவரது தகாத பற்றையே உணர்த்தும். சீதையை இராவணன் குழல் பிடித்திழுத்து எடுத்துச் சிறைவைத்ததை உணர்ந்த அவர் அதை மறைத்து அத்துடன் நில்லாமல் ஆங்காரங்கொண்டு அனுமன் சிந்தனையில் இது கூறி ஆத்திரம் தீரப்பார்க்கிறார்.

அனுமான் அசோக வனத்தை யழித்த செய்தியைச் சீதைக்குக் காவலிருந்த பெண்டிர் சென்று இராவணனிடம் உரைத்தனராக, இதை மாற்றி பருவத்தேவர் சென்றுரைத்தனரென்பர் கம்பர், இந்த இடத்தில் வால்மீகி கூறுததாகிய அனுமனது செயலைக் கம்பர் கூறுகிறார். அது ஓர் ஓமமண்டபத்தை அனுமன் பதித்து இலங்கை நகரில் எறிந்து கலக்கியது. கிங்கர் மடிந்த செய்தியையும் பருவத்தேவரே இராவணனுக்கும் கூறினர் என வால்மீகிக்கு மாறாகக் கம்பர் கூறினர். இனிமேற் செல்லுதும்.

—

## அனுதாபம்.

பெரிய குளம் வடகரை தொட்டப்பநாயக்கனூர் ஜமீன்தாரும் பிரபல கீர்த்திவானும் பொதுஜன உபகாரியுமான பெரியார் உயர் திரு. திவான்பகதூர் வி. ராமபத்திர நாயுடுகாரு அவர்கள் 27—12—29.ல் காலமாய்விட்ட சேதி கேட்டு மிகவும் அனுதாபப் படுவதுடன் அவரது அருமைக் குமாரரான உயர்திரு. நாகமராமபத்திர நாயுடுகாரு அவர்களுக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

## திரு. ராஜமாணிக்க பண்டாரம்.

சேலம் தாலூக்கா போர்டு பிரசிடெண்டாகவும், செனட் மெம்பராகவும் தெரிந் தெடுக்கப்பட்ட சேலம் பிரபல வியாபாரியுமாகிய உயர் திரு. ராஜமாணிக்க பண்டாரம் அவர்களுக்கு 17—1—30 ல ஒரு பாராட்டுதல் கொண்டாட்டமும் சிற்றுண்டி விருந்தும் நடந்தது. அனேக பிரபலஸ்தர்கள் வந்து திரு. பண்டாரம் அவர்களை பாராட்டினார்கள்.

## உதிர்ந்த மலர்கள்.

நமது நாடு பார்ப்பனீய ஆதிக்கத்திலும் பணக்கார செல்வாக்கிலும் இருக்குமட்டும் பிரிட்டிஷ் அரசாங்கம் இருந்துதான் ஆகவேண்டும்.

ஈ. வே. ரா.

பூரண சுயேச்சை என்பது ஒரு மனிதன் எவ்விதத்திலும் எதற்கும் அடிமைபட்டிராத விடுதலை என்றால் நான் அதை மனப்பூர்வமாய் வரவேற்கின்றேன்.

அப்படிக்கில்லாமல் பிரிட்டிஷார் இந்த நாட்டைவிட்டு போவதும் (திரு காந்தி சொல்லும்) ராம ராஜ்ஜியம் ஏற்படுத்துவதும் என்றால் ருஷிய அரசாங்கத்தையே நான் கூவி அழைக்கமுந்துவேன். ஈ. வே. ரா.

இந்த நாட்டிற்கு சீர் திருத்த உணர்ச்சி ஏற்பட்டு அதை அமுலில் நடத்திவைக்கும் ஆசை பொது மக்களுக்கு ஏற்பட்டதற்காக யாருக்காவது நன்றி செலுத்தவேண்டுமானால் அது முதலில் திருமதி மேயோ அம்மைக்கு உரியதாகும். ஈ. வே. ரா.


மேயோ கூற்று

மெய்யா—பொய்யா?

விலை அணா 4.

சி. எ. அய்யாமுத்து,
புஞ்சைப் புளியம்பட்டி,
கோயமுத்தூர் ஜில்லா.

# ஈ. வெ. இராமசாமியாரின் மலேயா நாட்டு சுற்றுப்பிரயாணம்.

## "எதிர்பிரசாரத்தினால்" ஏற்பட்ட நன்மைகள்

## ஆடம்பரமான வரவேற்புகள், குதூகுலமான கொண்டாட்டங்கள்

## ஊர்வலங்களில் நூற்றுக்கணக்கான மோட்டார் வண்டிகள்

ஆயிரக்கணக்கான பூமாலைகள் பதினாயிரக்கணக்கான ஜனங்கள் தெருக்களில் நிறைந்து தும்பிடுதல் நடத்த [illegible] வாத்தியங்கள் காலம் [illegible] அனுசரித்து கொண்ட தலை 11 நாளில் 17 ஊர்களில் 30 பிரசங்கங்கள் 34 உபசாரப்பத்திரங்கள் 73 புகைப் படங்கள்.

டிசம்பர் மாதம் 15 ௳ நாகை 20 ௳ காலை பினாங்கு 20 ௳ மாலை கோலப்பிறை அல்லது பட்டர்வர்த் 21 ௳ ஈப்போ 22 ௳ ஈப்போ. 23 ௳ ஈப்போ, 24 ௳ ஈப்போ, 25 ௳ சிங்கப்பூர், 26, 27 ௳ காலை ஜோகூர்பார் பகல் பிரிட்டிஷ் நாவல் பேஸ் அல்லது கப்பல்படை ஸ்தலம் பிரிட்டிஷ் ஆகாயக்கப்பல் படை ஸ்தலம் மாலை சிங்கப்பூர், 28 ௳ பத்துபகார் 29 ௳ மூவார் 30 ௳ மலாக்கா, 31 ௳ சிரம்பான். ஜனவரி 1 ௳ சிரம்பான் 2 ௳ கோலாலம்பூர் 3 ௳ கோலாலம்பூர், 4 ௳ கோலக்குப்பு, 4 ௳ மாலை தஞ்சமாலிம் 5 ௳ சுங்கக்குநட் 6 ௳ தெலுக்கான்சன், 7 ௳ காலை கம்பார் பகல் ஈப்போ மாலை பக்கிட்மர்ட்ஜான் அல்லது சுங்குருப்பை 8 ௳ பினாங்கு, 9-௳ மாலை சுங்கப்பட்டாணி 9 ௳ இரவு பினாங்கு 10 ௳ காலை பட்டர்வர்த் 10 ௳ மாலை தைபிங் 10 ௳ இரவு பினாங்கு மலாய் நாடகம் 11 ௳ காலை 11 மணிக்கு பினாங்கிலிருந்து இந்தியாவுக்கு கப்பல் ஏற்றம். 16 ௳ நாகை, 17 ௳ மாயவரம், 18 ௳ ஈரோடு.

---

திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமியார், அவரது மனைவியார் நாகம்மையார், எஸ். ராமநாதன், எம். ஏ. பி எல். பண்டிதர் சாமி சிதம்பரனார், மாயவரம் நடராஜன், பூவாளூர் பொன்னம்பலனார், மாயவரம் சொக்கலிங்கம் ஆகியவர்கள்

15—12—29-௳

காலை 9-மணிக்கு நாகை உயர்திரு வி. பி. கே. காயாரோகணம் அவர்கள் வீட்டிலிருந்து திருவாளர்கள் வி. பி. கோவிந்தசாமி பிள்ளை, ஜே. எஸ். கண்ணப்பர், பாரிஸ்டர் கே. சி. சுப்பிரமணியம், வி. பி. கே. நடராஜன் திரு. காயாரோகணம் சகோதரர். மா. க. நடராஜ பிள்ளை, ஜி. வி. கே. நாயுடு [பொட்டகிராபர்] ஆறுமுகம் பிள்ளை, ராமாமிர்தம்மாள், எஸ். சம்பந்தம், சிதம்பரம், ராமலிங்கம், கனகசபை, சாமிநாத பிள்ளை, வக்கீல் விஜயராகவலு நாயுடு, டி. மணி மற்றும் தேசபக்த சமாஜத்தார்களும் தொழிலாள சகோதரர்களுமாய் சுமார் 500 பேர்களுக்கு மேலாகவே திரு. ராமசாமியாரையும் சகாக்களையும் அழைத்துச் சென்றார்கள். துறைமுகத்திலும் சுமார் ஐநூறு பேர்கள் வரை கூடியிருந்து பலரால் மாலைகள் சூட்டப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்டு கப்பல் அதிகாரிகளுடன் படகேறி புறப்பட்டார்கள். படகு கப்பல் போய்ச் சேரும்வரை அடிக்கடி புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. கப்பலில் ஏறினதும் நாகை கப்பல் அதிகாரிகளால் பெரியார் தம்பதிகளை மாலுமிக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டு பிரத்தியேகமான முதல் வகுப்பு சலூன் அறைகளில் இடவசதி செய்துகொடுக்கப்பட்டது. மற்றவர்களுக்கும் சௌகரியமான இடவசதி செய்துகொடுக்கப்பட்டது.

துறைமுகத்தில் கப்பலுக்குப் போக படகு ஏறுமுன் சமுத்திரத்தில் அலைகள் அதிகமென்றும் படகு அதிகம் ஆடும் என்றும் அன்றுவரையில் படகுகள் காற்றினால் மிக்க அவஸ்தைப்பட்டன என்றும் பலவாறு சொல்லிக் கொள்ளப்பட்டிருந்ததை முன்னிட்டு ராமசாமியாரும் சகாக்களும் மிக்க பயத்துடனேயேதான் படகேறினார்கள் என்று சொல்லவேண்டும். ஆனால் அவர்கள் படகேறியதும் எவ்வித அலையும் அசைவும் இல்லாமல் இருபது நிமிஷத்தில் படகு கப்பலை சேர்ந்துவிட்டது. பிறகு கப்பலில் ஏறியபோதும் அதுபோலவே கப்பல் புறப்பட்டவுடன் அலைகளினால் கப்பல் அதிகமாக ஆடும் என்றும் மயக்கம் வருமென்றும், வாந்தியாகுமென்றும் பலவாறாகச் சொல்லப்பட்டபோதிலும் கப்பல் புறப்பட்டது கூட தெரிவதற்கில்லாமலும் கப்பல் ஓடிக்கொண்டிருப்பது கூட தெரிவதற்கில்லாமலும் அவ்வளவு சௌகரியமாகப் போய்க்கொண்டிருந்தது. சமுத்திரம் மூன்று நான்கு நாட்களாக ஏரியில் தண்ணீர் அசைவற்று நிற்பது போல் மிகமிக, அதாவது, சுமார் இருபது முப்பது வருஷங்களாக கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருப்பவர்கள் என்றும் கண்டிராத மாதிரியாக அவ்வளவு சாந்தமாக இருந்தது. கப்பலில் இருந்த மூன்றாவது வகுப்பு மக்களும் இரண்டாவது வகுப்பு மக்களும் தங்களது வழக்கமான மூடநம்பிக்கையால் பலவாறு பேசிக்கொண்டு திரு. ராமசாமியாரிடம் வந்து புகழ்ந்து பேசி வணங்கிப் போவதாயிருந்தார்கள். இதன் காரணத்தால் கப்பலிலிருந்தே மூடநம்பிக்கை எதிர்ப்புப்பிரசாரம் செய்ய வேண்டியிருந்தது. தவிர கப்பல் பினாங்கு துறைமுகத்திற்கு வரும் வரை தினம் ஒன்றிரண்டு கம்பியில்லாத தந்திகள் மலாயாநாட்டு பல இடங்களிலிருந்து திரு. ராமசாமியார் தம்பதிகளையும் சகாக்களையும் வரவேற்பதாக வந்து கொண்டே இருந்தன.

### பினாங்கு.

பிறகு 20—12—29௳ காலை பினாங்கு துறைமுகத்திற்கு 2, 3, மைலுக்கு இப்புறமாகவே கப்பல் நிறுத்தப்பட்டது (அதாவது குவாரண்டைன் என்னும் தொத்து வியாதி பரீக்ஷை ஸ்தலத்தில் பிரயாணிகளை இறக்கி விடுவதற்காக நிறுத்தப்பட்டது.) பினாங்கு அசிஸ்டெண்டு கண்ட்ரோலரும் போலீசு முக்கிய அதிகாரிகளில் ஒருவருமாகிய இரண்டு ஆங்கிலேய கனவான்கள் வந்து திரு ராமசாமியாரின் மலாய் விஜயத்தைப்பற்றி இந்து மகா சங்கத்தின் பேரால் சிலரும் அரசியல் விஷயத்தின் பேரால் சிலரும் மலாய் கவர்மெண்டுக்கு செய்து கொண்ட ஆக்ஷேபனை விண்ணப்பங்களைப்பற்றியும் கிளர்ச்சிகளைப் பற்றியும் எடுத்துச் சொன்னதுடன் பினாங்கு துறைமுகத்தில் தங்களால் அடக்கமுடியாத கூட்டம் கூடி இருப்பதால் பிரயாணிகளின் போக்குவரத்துக்கு தடைப்பட்டிருக்கின்றதென்றும் துறைமுகத்தில் அதிகநேரம் செலவழிக்காமல் ஊர்வலத்தை சற்று சீக்கிரமாக நடத்திச் செய்ய வேண்டுமென்றும் தன் சொந்த பொறுப்பில் கேட்டுக்கொள்வதாகவும் சொன்னார். திரு. ராமசாமியார் சம்பிரதாயப்படி நன்றி செலுத்துவதாய்ச் சொல்லிவிட்டு ஊர்வலம் முதலிய வரவேற்பு விஷயங்கள் கூடாதென்றும் அதற்காக கண்டிப்பாய் ஆடம்பரமோ செலவோ செய்யக்கூடாதென்றும் வரவேற்புக்காரர்களுக்குத் தெரிவித்திருப்பதாயும் ஆனாலும் இந்த நாட்டில் வந்து முழுதும் அவர்களையே நம்பி தனது பிரயாண விஷயமான சகல ஏற்பாடுகளையும் அவர்கள் கைக்கே விட்டுவிட்டபடியால் அவர்களை அடியோடு அலட்சியம் செய்து தன்னிஷ்டப்படி நடக்கமுடியாத நிலையில் இருப்பதாகவும் சொல்லி தன்னால் கூடியவரை அவசரப்படுத்துவதாக வாக்குக்கொடுத்தார்.

அடுத்தபடியாக கப்பல் பிரயாணிகளின் குறை நிவாரணச் சங்கத்தலைவர் திரு. எ. சிங்காரம் பிள்ளையும் மேற்படி கமிட்டியின் காரியதரிசியுமான திருவாளர் எம். துரைராஜு அவர்கள் கப்பல் பிரயாண இன்ஸ்பெக்டர் எம். எம். எஸ். முதலியார் முதலியவர்கள் திரு ராமசாமியாரிடம் வந்து மாலையிட்டு வரவேற்று விட்டு சற்று தனியாகப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்டு தனி அறைக்கு அழைத்துப்போய் பினாங்கில் தங்கள்

வருகையைப் பற்றி சிலர் தப்பாய் எடுததுக்கூறி இருக்கிருர்களென்றும் ஆனாலும் அதிக ஜனங்கள் ஆவலாய் வரவேற்கக்காத்திருக்கிருர்கள் என்றும் ஆனால் கடவுளைப்பற்றியும் சமயங்களைப்பற்றியும் பேசவேண்டிய அவசியம் எற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று ஆசைப்படுவதாகவும் சொன்னார்கள். இதற்கு திரு.ராமசாமியார்கடவுளைப்பற்றியோ சமயங்களைப்பற்றியோ பிரசாரம் செய்வது தனது வேலை அல்லவென்றும், தான் எதிர்பார்க்கும் சீர்திருத்தங்களுக்கு அதன் எதிரிகள் தக்க சமாதானம் சொல்ல யோக்யதை இல்லாமல் பயங்காளித்தனமாயும் பாமர மக்களை ஏமாற்றும் சூழ்ச்சியாயும், கடவுள்கள் "மதங்கள் வேதங்கள் புராணங்கள் என்பவைகளைக் கொண்டு வந்து முட்டுக்கட்டையாய்ப் போடுவதால் அவைகளைஎடுத்துஎறிந்துவிட்டு முன்செல்லவேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு ஏற்படுகின்றதென்றும் ஆனாலும் உண்மையான கடவுளும் உண்மையான மதமும், உண்மையான வேதமும் ஒன்று இருக்குமானால் அது தன்னால் அழிந்துபோகுமோ அல்லது மறைந்து போகுமோ என்று யாரும் பயப்படவேண்டியதில்லை என்றும் சொன்னர்.

பிறகு கப்பல் பிரயாணத்தைப்பற்றிய தகவல்கள் பேசிவிட்டு கலைந்தார்கள். பிறகு மேற்படி அறையை விட்டு திரு. ராமசாமியார் வெளிவந்ததும் சுமார் 7மணிக்கு பினங்கு ஐக்கிய இந்திய சங்கத்தைச் சேர்ந்தவர்களும் இந்திய சங்கத்தைச்சேர்ந்தவர்களும், வாலிப சங்கத்தைச்சேர்ந்தவர்களும் மருத்துவ சங்கத்தைச் சேர்ந்தவர்களும் மற்றும் பிரபல வியாபாரியும் செல்வவந்தருமான ஜனப் மகமது ராவுத்தர் அவர்களும் ஜனப் ஆர். கெ. மகமது காசிம் ஜே. பி. அவர்களும், அனேக படகு முதலாளிகளும், மகமதிய சமூகத் தலைவருமான சீனிராவுத்தர் அவர்களும், சுவாமி அற்புதானந்தா, பிரகாசம் சுப்பிரமணியம் முதலியவர்களும் ஒரு தனி மோட்டார் படகுடன் வந்து மாலைகள் போட்டு வரவேற்று எல்லோரையும் கப்பலில் இருந்து படகுக்கு இறக்கி கரைக்கு அழைத்துக் கொணடுவந்தார்கள்.

படகு கரைக்குப் பக்கத்தில் வந்ததிலிருந்து துறைமுகத்திற்கு வரும் வரை கரையில் இருந்த பதினாயிரக்கணக்கான மக்கள் துவாலைகளை வீசுவதும், ஜே கூச்சல் போடுவதும்; மாலைகளைத்தூக்கிக்காட்டுவதுமான கொண்டாட்டங்கள் நேரில் பார்த்தவர்களுக்குத்தான் முழு தத்துவமும் விளங்கும். பிறகு, படகிலிருந்து கரையில் கால்வைத்ததும் கரையில் இருந்த மக்கள் ஒவ்வொருவராகமாலைகள் போட ஆரம்பித்தது சுமார் அரைமணிவரையில் மாலைகள் போட்டவண்ணமாக இருந்தும் எல்லா மாலைகளும் போட்டுமுடியாதிருந்ததால் நடந்துகொண்டே மாலைகளைக் கையில் வாங்கி வாங்கி பக்கத்தில் நின்றுகொண்டிருந்தவர்களுக்கெல்லாம் கொடுத்துக்கொண்டே ரோட்டுக்கு வந்து மோட்டாரில் ஏறி அவசரமாய் விடும்படிகேட்டுக்கொண்டார். ஏனெனில் சுமார் ஒரு மணி நேரமாய் ரோட்டில் வண்டிகள் போக்குவரத்து இல்லாமலும் ஜனங்கள் நடந்து செல்லமுடியாமலும் தடைப்பட்டு இருந்ததாய் தெரியவந்ததால் அவசரப்படுத்தவேண்டியதாயிற்று. எவ்வளவு அவசரப்படுத்தியும் மணிக்கு 2, 3 மைல் வேகத்திற்குமேல் வண்டி விடமுடியவில்லை. ஏனெனில் ஜனக்கூட்டம் ஒரு புறம் இருக்க ஆண்களும் பெண்களும் கீழே விழுந்து கும்பிடுவதும் நிலத்திற்கு முத்தம் கொடுப்பதும் மண்ணை எடுத்து நெற்றியில் பூசிக்கொள்ளுவதுமான அறிவீனமான காரியங்கள் எவ்வளவு தடுத்தும் வண்டியைப்போக விடாமல் மறித்துகொண்டே இருந்தன. பிறகு திரு. ராமசாமியார் கீழே இறங்கி ஓடிப்போவதாகச் சொன்னபிறகு சற்று வண்டி வேகமாய்ப்போக சௌகரியமேற்பட்டது. ஊர்வலம், அதாவது வண்டிகளும் கூட்டங்களும் நேரே ஐக்கிய இந்திய அசோசியேஷனுக்கு அழைத்துச்செல்லப்பட்டு சங்கத்தலைவரும் இந்தியப்பிரதி நிதியும் ஆனரபிளுமான அப்துல் காதர் அவர்கள் தலைமையில் ஐக்கிய இந்திய சங்கத்தாரின் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு பினங்கு தமிழ் மக்கள் கழகத்தாரால் ஒரு வரவேற்புப் பத்திரமும் மருத்துவ குலத்தாரால் ஒரு பத்திரமும் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு மலாய் நாட்டில் பல பாகங்களில் உள்ள பல சங்கத்தார்களால் தனித் தனியாகப் பெயர்கள் சொல்லி மாலைகள் போடப்பட்டன. பிறகு திரு. ராமசாமியார் இதற்கு மறுமொழியாக நன்றி கூறுகையில் தனக்கும் தனது நண்பர்களுக்கும் இந்தப் பினங்கில் செய்த வரவேற்பும் உபசாரமும் பத்திரங்களில் கண்ட புகழ் மொழிகளும் மற்றும் தன்னைப்பற்றி பேசிய புகழ் வார்த்தைகளும் தனது ஊர்வலத்தில் ஜனங்கள் நடந்துகொண்ட மாதிரியும் பார்த்து தான் மிகுதியும் வெட்கமடைவதாயும் இவைகளில் அனேகம் தனது தகுதிக்கும் தனது கொள்கைக்கும் சிறிதும் பொருத்தமற்றதென்றும் மலாய் நாட்டு மக்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் தான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருந்தாலும் அதைக் காட்டியமாதிரி தனக்கு மிக்க சங்கடத்தைக் கொடுத்ததென்றும் இனியும் இம்மாதிரி இந்த நாட்டில் யாரும் செய்யாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது மலாய் நாட்டுப் பிரமுகர்கள் கடமை என்றும் சொல்லிவிட்டு தனது மலாய்நாட்டு வரவைப் பற்றி இங்கு ஏற்பட்டிருந்ததாய் சொல்லிக்கொள்ளப் பட்ட சில எதிர்ப்புப் பிரஸ்தாபங்களைக் கேட்டு தனக்கே தனது தொண்டில் சிறிது சந்தேகம் ஏற்பட்டு தாம் ஏதாவது பெரிய தப்பிதம் செய்கின்ருேமா என்று கூட யோசித்ததாகவும் ஆனால் பினங்கைப் பார்த்த பிறகு அந்த எண்ணமே அடியோடு மறைபட்டு தனது கொள்கைகளுக்கும் தொண்டுக்கும் முன்னிலும் அதிகமான உறுதியும் ஊக்கமும் ஏற்பட்டுவிட்டதென்றும் யோக்கியமான எவ்வித அரசியல்காரர்களும் மத இயல்புக்காரர்களும் சமூக இயல்புக்காரர்களும் அரசாங்கத்தார்களும் தன்னைக்கண்டு பயப்பட வேண்டியதில்லை என்றும் சுயமரியாதையும் சமத்துவமும் அறிவுவளர்ச்சியுமே தனது தொண்டின் லட்சியமென்றும் ஆதலால் தன்னால் யாருக்கும் எவ்வித ஆபத்தும் வந்துவிடாதென்று தான் உறுதியாய் கருதி இருப்பதாயும் சொல்லிமுடித்தார். பிறகு திரு. எஸ். ராமனுதன் அவர்கள் இதை அனுசரித்து ஆங்கிலத்தில் சில வார்த்தைகள் சொல்லி இந்தக்காலம் அறிவு வளர்ச்சிக் காலமென்றும் ஆதலால் மக்கள் ஒவ்வொன்றுக்கும் காரணம் தேட ஆசைப் படுவதைப் பற்றி யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை என்றும் அதைச் சொல்லவே தாங்கள் இங்கு வந்திருப்பதாகவும் சொன்னர். பிறகு அக்கிராசனர் ஆனரபிள் ஜனப் அப்துல் காதர் அவர்கள் முடிவுரையாக திரு. ராமசாமி, ராமநாதன் ஆகியவர்கள் தொண்டு உலகத்திற்கே ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்கக்கூடியதென்றும்இவ்விதத்தொண்டுக்குஇவர்களே தகுந்தவர்களென்றும் இப்பேர்ப்பட்டவர்கள் விஷயத்தில் சிலர் பினங்கில் விஷமப்பிரசாரம் செய்ததுமலாய் நாட்டில் உள்ள இந்தியர்களுக்கே அவமானமென்றும் ஆனாலும் விஷமக்காரர்கள் சூழ்ச்சி பலிக்காமல் அவர்கள் வெட்கப்படும்படி செய்துவிட்ட சக்தி எதிரிகளே இன்றைய வரவேற்பு மூலமே அறிந்திருப்பார்களென்றும் சொல்லி முடித்தார்.

பிறகு திரு. ராமசாமியாரும் அவர் சகாக்களும் அவர்களுக்கென்று முதலாளி ஜனப் முகமது ராவுத்தர் அவர்களால் பினங்குக்கு அப்பால் 4 மைல் தூரத்தில் சுமார் ஆயிரம் வெள்ளி செலவில் சிங்காரவனம் போல் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது பங்களாவுக்கு அழைத்துச் செல்லப் பட்டு அங்கு ஒரு பெரிய விருந்து நடந்தது. அதில் பினங்கில் உள்ள பிரபலஸ்தர்களும் அதிகாரிகளும் மற்றும் சுயமரியாதைத் தொண்டர்களுமாக சுமார் முன்னூறு பேர்களுக்கு அதிகமாகவே இருவித உணவு அளிக்கப்பட்டது. சாப்பாடு முடிந்த அரை மணி நேரத்திற்கெல்லாம் பங்களாவுக்கு பினங்கு பட்டணத்திலிருந்து ஏராளமான ஜனங்கள் வந்து கூடிவிட்டதாலும்அவர்கள்சிலவார்த்தைகள்பேசவேண்டுமென்று ஆசைப்பட்டதாலும் திருவாளர் பினங்கு கிருஷ்ணசாமி ஜே. பி. அவர்கள்தலைமையில் பினங்கு தொண்டர்கள் பலர் சுயமரியாதைப் பாட்டுகள் பாடிய பின்பு திரு ராமசாமியார் ஒரு மணி நேரம் தாங்கள் மலாய் நாட்டிற்கு வந்ததின் சுருக்கத்தைப்பற்றி விளக்கமாகப் பேசினர்;

அதாவது, நாங்கள் இங்கு எந்தக் கோவிலையும் இடிக்கவரவில்லையென்றும் எந்த மதத்திற்கும் ஆபத்தையோ ஆதரவையோ உண்டாக்கவரவில்லையென்றும் மற்றவர்களைப்போல் பணம் வசூல்செய்து மூட்டைக் கட்டிப்போக வரவில்லையென்றும் உங்கள் அறிவையும் ஆற்றலையும் ஊக்கத்தையும் தட்டி எழுப்ப வந்து இருக்கிருேமென்றும் அதற்குத் தக்க உதாரணங்கள்காட்டிப்பேசினர் இடையிடையே கைதட்டுதல்கள் நடந்தவண்ணமாகவே இருந்தது.

பிறகு 2-30 மணி சுமாருக்கு திரு ராமசாமியாரும் கூட்டத்தாரும் பினங்கு இந்திய சங்கத்தாருடைய வரவேற்புக்கு அழைக்கப்பட்டு அச்சங்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி இருந்தார்கள். திருவாளர் செல்லையா அவர்கள் தலைமையில் பினங்கு மருத்துவ சங்கத்தாராலும் பினங்கு வாலிபசங்கததாராலும்தனித் தனி வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்ததும் அதற்குப் பதில் கூறுமுகத்தான் வாலிபர்கள் பெருமையையும் சுயமரியாதை இயக்கத்திற்குத் தான் வாலிபர்களையே நம்பி துணிந்து விட்ட உறுதியையும் எடுத்துச் சொல்லி இயக்கக் கொள்கைகளையும் விளக்கிப் பேசினர் திரு. ராமனுதன் இதை அனுசரித்து ஆங்கிலத்தில் பேசினர். பிறகு கூட்டம்முடிந்தது.

### கோலப்பிரை அல்லது பட்டர்வர்த்து 20—12—29

அங்கிருந்து மாலை 4 மணி சுமாருக்கு திரு. ராமசாமியாரும் அவரது சகாக்களும் மற்றும் சிலரும் பினங்கை விட்டு-மோட்டார்படகில் எதிரெதிர்த்த துரையாகிய கோலப்பிரைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு திரு. அருணுசலம் செட்டியார் வீட்டில் ஆங்கில முறைப்படி பலமான சிற்றுண்டி அளித்து பிறகு அங்குள்ள நமசிவாயம் தமிழ் பாடசாலைக்கு அழைத்துச்சென்று அதை பார்வையிடச்செய்து பெரிய புகைப் படமெடுக்கப்பட்டு அவ்வூர் ஒப்ராஎல்று மலாய் நாடகமேடையில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அங்கு சுமார் 4—5 ஆயிரம் பேர்களுக்கு மேலாகவே உள்ளும் வெளியிலுமாய் மக்கள் ஆண்களும் பெண்களும் கூடியிருந்தார்கள். அக்கூட்டத்திற்கு திரு நமச்சிவாயம் அவர்கள் தலைமை வகித்தார். அப்போது கோலப்பிரை உமையவா் இந்து சபை . யாரால் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப் பட்டது. பிறகு கோலப்பிறை பி. டப்பிள்யூ டி. உத்தியோகஸ்தர்களால், அதாவது திருவாளர்கள் சி. அபிஷேகம், துரைசிங்கு. டி. சேகனர், டி. என். சோமசுந்திரம், யம். பச்சமுத்து, பி. சாமிநாதன், ஜே. டட்[illegible], தாமஸ், வி. திருவெங்கடம், எ[illegible] எ. ரெட்டி, சுப்பையா

ஆர், கே. சபை, கே. எஸ். அந்தோணி சின்னப்ப ஆசாரி, காளிமுத்து முதலியவர்களால் இரண்டு வெள்ளி புஷ்ப ஜாடிகள் அவர்களது ஞாபகக் குறிப்புக்காக வழங்கப்பட்டன.

பிறகு திரு. ராமசாமியார் வரவேற்புக்கும் மற்றவர்களுக்கும் பதிலுரைத்துவிட்டு சுமார் ஒரு மணி நேரத்திற்கு அதிகமாகவே இந்தியர்கள் நிலைமையும் மற்றநாட்டார்கள்நிலைமையும் தெளிவாக எடுத்துச் சொன்னார். திரு. ராமனாதன் அவர்களும் அரை மணி நேரம் ஆங்கிலத்தில் பேசினார். பிறகு எழுமணிக்கு மேல் அறுபது மைல் தூரத்தில் உள்ள தைப்பிங் என்ற பட்டணத்துக்கு திருவாளர்கள் ராமசாமியார் அவர்களது சகாக்கள் சுவாமி அற்புதானந்தா தே சுப்ரமணியம் அய்யாரு காளியப்பன் மற்றும் சிலரும் 5, 6 மோட்டார்களில் பிரயாணமானார்கள். சுமார் இரவு பத்து மணிக்கு தைப்பிங்கு சேர்ந்து அங்கு உயர் திரு. இரத்தினம் பிள்ளை அவர்கள் தலைமையில் தைப்பிங்கு பிரமுகர்களால் மாலையிட்டு வரவேற்று திரு. இரத்தினம் பிள்ளை, அவர்கள் வீட்டில் பலமான விருந்து நடத்தப்பட்டு அங்கேயே இரவு தங்கியிருந்து

## 21—12—29

மறுநாள் காலையில் திரு. ராமசாமியாரும் மற்றவர்களும் சிற்றுண்டி அருந்திவிட்டு சிறிய சொற்பொழிவு நடத்திவிட்டு சுமார் நாற்பது மைல் தூரமுள்ள கோலாகங்சார் என்னும் ஊருக்குப் புறப்பட்டார்கள். அங்கு திருவாளர் இராஜகோபால் நாயுடு அவர் சகோதரர் கோவிந்தராஜுலு நாயுடு முதலியவர்கள் ஜாகையில் அவ்வூர் பிரமுகர்களின் விருந்தாளிகளாக இருந்து பகல் சாப்பாடு ஆனதும் அங்கு புகைவண்டி ஏறி பகல் இரண்டு மணிக்கு ஈப்போ வந்து சேர்ந்தார்கள். அதே வண்டியில் மகாநாட்டுத் தலைவர் ஜனாப் டாக்டர் மகம்மத்கவுஸ் ஜே. பி. அவர்களும் வந்தார்கள். ரயில்வண்டி ஈப்போ வந்து சேர்ந்ததும் ஈப்போ ரயில்வே ஸ்டேஷனில் கண்ணுக்கு எட்டியதூரம் வரையில் பதினாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்து நூற்றுக்கணக்கான மாலைகளாலும் ஆயிரக்கணக்கான வெல்கம்களாலும் பதினாயிரக்கணக்கான ஜே சப்தங்களாலும் வரவேற்று புகைப்படமெடுக்கப்பட்டு சற்று இளைப்பாறியதும் [illegible] சாரணர்கள் புடைசூழ தலைவர் முதலியவர்கள் தமிழர் மகாநாட்டிற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

மகாநாடு ஈப்போ காளவ்சி ரோட்டிலுள்ள சிலோன் அசோசியேஷன் மண்டபத்தில் 21—12—29 ௳ மாலை 4-மணிக்கு துவக்கப்பட்டது. மகா[illegible] கலந்துகொண்ட பிரதிநிதிகள் [illegible] 75, 50, 40, 30, 15, ஏழை [illegible]கள் வீதம் கட்டணங்கள் [illegible]பட்டிருந்ததும் மண்டப[illegible] பெண்களும் ஆண்களும் [illegible] இல்லாமல் பிரதிநிதிகள் வெளியிலும் இருக்க வேண்டி இருந்தார்கள். முதலாவதாக தலைவர்கள் மண்டபத்திற்குள் சென்றதும் அவர்களை எல்லோரும் எழுந்து நின்று வரவேற்று மேடையில் அமரச்செய்ததும் வரவேற்புத் தலைவர், திரு அய்யாரு அவர்கள் தலைமையில் சுவாமி அற்புதானந்தாவால் திரு. ராமசாமியாருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம்வாசித்துக்கொடுக்கப்பட்டது. பிறகு திரு. ராமசாமியார் வரவேற்புக்குப் பதில் சொல்லிவிட்டு அரை மணிநேரம் பேசி மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

பிறகு திரு பிரகாசம் அவர்கள் தலைமையில் ஜனாப் மகமத் யூசுப் அவர்களால் திரு ராமசாமியாரின் உருவப்படம் திறந்துவைக்கப்பட்டது. பிறகு திரு. சுப்பாரத்னம் அவர்களால் அரசர்படம் திறக்கப்பட்டது. பிறகுவரவேற்புத்தலைவர் திரு. அய்யாருஅவர்கள்வரவேற்புஉபன்னியாசம்செய்தார். பிறகு மகாநாட்டுத்தலைமை வகிக்க ஜனாப் டாக்டர் மகமது கவுஸ் ஜெ. பி. அவர்களை திரு. சாரங்கபாணிஅவர்கள் பிரேரேபிக்க சாமி அற்புதானந்தா ஆமோதிக்க மற்றும் பலர் ஆதரித்தார்கள். இந்த சமயத்தில் தமிழ்நாடு பத்திரிகையின் மலாய் சிஷ்யரான ஜனாப் அமீத்கான் எழுந்து சுயமரியாதை இயக்கம் மகமதியர்களுக்கு விரோதமானதால் ஒரு மகமதியர் இம்மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கக்கூடாது என்று சொல்லி அதைப்பற்றிப்பேச தனக்கு நேரம் கொடுக்கவேண்டும் என்று கேட்டார். அந்தப்படி அவருக்கு நேரம்கொடுக்கப்பட்டது. அவர் இந்த நேரத்தை சென்னை தாருல் இஸ்லாம் பத்திரிகையையும் அதன்பத்திராதிபரையும் கேவலமாக வைவதற்கு உபயோகித்ததால் ஜனங்களுக்கு பொறுமை இல்லாமல் எழுந்து கிட்டபோய் அவர் பேசுவதற்கு ஆக்ஷேபித்தார்கள். ஆனபோதிலும் திரு. ராமசாமியார் அவர் இஷ்டப்படியேபேசட்டும் பிரதிநிதிகள் அபிப்பிராயப்படி நடக்கட்டும் என்று சொல்லி தாராளமாய் பேச சந்தர்ப்பம் கொடுக்கச் செய்தார். முதலில்சுயமரியாதை இயக்கம்மகமதியர்களுக்கு விரோதம் என்று சொல்லி ஆரம்பித்தவர்கடைசியில் 1300வருஷத்திற்கு முன்னுலேயே மகமதிய மதத்தில் இந்த சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் முழுவதும் இருக்கின்றதென்றும் தங்களுக்கு யாரும் சுயமரியாதை போதிக்கவேண்டியதில்லை என்றும் ஆதலால் மகமதியர் தலைமை வகிக்கக்கூடாதென்றும் சொல்லி உட்கார்ந்தார். அதை யாரும் ஆதரிக்கவில்லை. பிறகு ஓட்டு எடுக்கப்பட்டதில் அவர் ஒருவர் மாத்திரம் விரோதமாய் கைதூக்கினார். பெருத்த கரகோஷத்தினிடையே ஜனாப் டாக்டர் மகமது கவுஸ் அவர்கள் தலைமை வகித்தார். உடனே அவருக்கு வரவேற்புக் கமிட்டியாரால் ஒரு வரவேற்புப்பத்திரம்வாசித்துக் கொடுக்கப்பட்டது பிறகுதிரு. ராமசாமியாருக்கு ஈப்போ இந்திய மக்களால் ஒரு வரவேற்புப் பத்திரமும் ஈப்போ மருத்துவ சங்கத்தாரால் ஒரு வரவேற்புப் பத்திரமும் ஈப்போ ஆதிதிராவிட சங்கத்தாரால் திரு. கருப்பமலை மூர்த்தி அவர்களால் ஒரு வரவேற்புப் பத்திரமும் வாசித்துக் கொடுக்கப்பட்டு பல சங்கங்களால் மாலைகள் போடப்பட்டன. முதலில் திரு. ராமாநதன் பேசினார். பிறகு திரு. ராமசாமியார் இவைகளுக்குப்பதில் சொல்லுமுகத்தான் இரண்டு மணி நேரம்பேசினார். இதில் மதத்தின் பேரால் உலகத்திற்கே ஏற்பட்ட கெடுதல்களும் கடவுள்கள் பேரால் மக்களுக்கு ஏற்பட்ட கெடுதல்களும் கோவில்கள் குருக்கள் பேரால் மக்களின் செல்வநிலைக்கு ஏற்பட்ட கெடுதல்களும் கற்பு என்னும் பேரால் பெண்களுக்கு ஏற்பட்ட கெடுதல்களும் மோட்சம் மறுபிறப்பு என்னும் பேரால் மனிதத்தன்மைக்கு ஏற்பட்ட கெடுதல்களும் எடுத்துச் சொல்லிக்கொண்டு வரும்போது ஒருவர் எழுந்து கடவுள் உண்டா இல்லையா என்றும் அவரை வணங்க வேண்டுமா வேண்டாமா என்றும் குறிப்பிட்ட ஒரு சீட்டை நீட்டினார் அதை வாங்கிப் பார்த்து விட்டு அதைப் பற்றி தனக்கு நேரத்தை செலவழிக்க இஷ்டமில்லையென்றும் தவிரவும் கடவுளைப்பற்றி சொன்னவர்களும் அது மனதுக்கு எட்டாதது வாக்குக்கு எட்டாதது கண்ணுக்கும் எட்டாதது நம்பினுல்தான் உண்டு, இல்லாவிட்டால் இல்லை, என்று சொல்லி இருக்கின்றார்கள் என்றும் ஆனாலும் தான் எதாவது அதைப் பற்றிசொல்லித்தானகவேண்டுமானல் கேள்வி கேட்டவர் கடவுள் என்றால் என்ன என்று நினைத்துக் கொண்டிருக்கிறார் என்றும் என்னென்ன குணகர்மங்கள் அதன்மீதுற்றுகின்றார் என்றும் விளக்கமாக ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்தால் அப்படிப்பட்ட கடவுள் உண்டா இல்லையா என்றும் அதை வணங்க வேண்டுமா வேண்டாமா என்றும் வணங்குவதானல் எப்படி என்றும் மற்றும் விபரங்களும் சொல்ல முயற்சிப்பதாயும் இங்கு கொடுக்க சாத்தியப்படாவிட்டாலும் ஜாகைக்காவது ஊருக்காவது அனுப்பிக் கொடுக்கும்படியும் சொன்னார். எல்லோரும் சிரித்தார்கள். பிறகு வேதம் சாஸ்திரம் புராணம் என்னும் பேர்களால் மக்கள் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் முயற்சிக்கும் ஏற்பட்ட கெடுதல்களையும் வெகு விளக்கமாய் எடுத்துச்சொன்னார். இந்த இடையில் ஒரு மலையாளி தங்கள் நாட்டைப்பற்றி இங்கு பேசக்கூடாது என்று அக்கிராசனரைக் கேட்டுக் கொள்வதாகச்சொன்னவுடன் ஆவேசத்துடன் மலையாள சங்கதிகள் ஒன்று விடாமல் சொல்லி இது பொய்யா இதுபொய்யா என்றுகேட்டு இதுமக்களுக்குத் தெரியவேண்டாமா என்றும் மற்றும் பல விஷயங்களையும் விளக்கி இதற்காகத்தான் சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது என்றும் சொல்லி அமர்ந்தார். மகாநாட்டுப் பிரதிநிதிகள் ஆண் பெண் அடங்கலும் சுயமரியாதை இயக்கத்தின் உண்மைகளையும் அவசியத்தையும் அப்பொழுது உணர்ந்த காகியானது புதிய உலகத்தில் அன்று முதல் புதிய பிறப்புத் தோன்றியதாகக் கருதினார்கள். பிறகு இரவு 7 மணிக்கு கூட்டம் கலைந்தது.

## 22—12—29


மறுநாள் காலை 8 மணிக்கு மகாநாடு தொடங்கிற்று. சமூகசீர்திருத்த சம்மந்தமாகப் பல தீர்மானங்கள் செய்யப்பட்டு கூட்டம் கலைந்தது. மீண்டும் பகல் இரண்டு மணிக்கு மகாநாடு கூட்டம் கூட பல தீர்மானங்கள் செய்து மகாநாடு வெற்றியுடன் முடிவு பெற்றது. பிறகு மாலை 5 மணிக்கு திரு. கிருஷ்ணசாமி ஜே. பி. அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. அதில் திருவாளர்கள் சாமி சிதம்பரனார், சி. நடராஜன், காளியப்பன், பொன்னம்பலனார் மற்றும் பலர் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றிப் பேசினார்கள். கேள்விகள் கேட்கப் பிரியமுள்ளவர்களைக் கேட்கும்படி கேட்டுக் கொண்டார்கள். யாரும் ஒன்றும் கேட்கவில்லை தகுந்த விடைகளும் அளித்தார்கள். பின்னர் இரவு 9 மணிக்கு கூட்டம் கலைந்தது.

## ஈப்போ
## 23—12—29

பிறகு 23—12—29 காலையில் திரு. ராமசாமியார் அவர்களும் அவர்களுடைய சகாக்களும் ஈப்போ நாடார் சங்கத்தாரின் அழைப்புக்கு இணங்கி அங்கு விஜயஞ் செய்தனர். அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கான நாடார் பெருமக்களாலும் மற்றும் பல தமிழ் மக்களாலும் ஜே கோஷத்துடன் வரவேற்கப்பட்டு மாலை சூட்டப்பட்டனர். பிறகு, மலாக்கா பெருமாள் நாடார் அவர்கள் தலைமையில் ஈப்போ நாடார்களால் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. திரு. ராமசாமியார் அவர்கள் அப்பத்திரத்தைப் பெற்று ஒரு மணி நேரம் நாடார் மக்களின் முன்னேற்றத்தைப்பற்றியும், அவர்களால் சுயமரியாதை இயக்கத்திற்குள்ள ஆதரவைப்பற்றியும் இந்தியாவில் இதுசமயம் சுயமரியாதை இயக்கத்திற்குத் தலைவர் ஒரு நாடார் கனவான் என்றும் அவர் தான் உயர் திரு. டப்ளியூ. பி. எ. சௌந்திரபாண்டியர் எம். எல். சி. என்றும் அவர் உதவியால் இயக்கம்பெற்றுள்ள பலத்தைபற்றியும் பேசினார்கள். பிறகுதலைவர் முடிவுரையுடன் 10 மணிக்குக்கலைந்தது. சௌந்திர பாண்டியர் வாழ்க. சுயமரியாதை தக்கு ஜே. என்கின்ற சத்தத்துடன் கூட்டம் கலைந்தது.

அன்று மாலை 6 மணிக்கு சிலோன் அசோசியேஷனில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது ம லஆயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் வந்திருந்தார்கள். அதற்கு திரு. தாமோதரம் அவர்கள் தலைமை வகித்தார்! அப்பொழுது திரு சாமி சிதம்பரனார், பொன்

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"


# குடி அரசு

ஈரோடு 1930 பிப்ரவரி மீ 2-உ


## பூரண சுயேச்சைப் புரட்டு.

அரசியல் புரட்டுகள் நாளுக்கு நாள் போட்டிபோட்டுக்கொண்டு முன்னேறி மக்களை ஏமாற்றி நாட்டைப் பாழாக்கிக்கொண்டு வருகின்றது என்பதற்கு உதாரணம் இந்திய தேசியக் காங்கிரஸ் என்பது "இந்தியா பூர்ண சுயேச்சை அடையவேண்டும் என்பது காங்கிரஸ் லட்சியம்" என்பதாக தீர்மானிக்கப்பட்டிருப்பதே போதுமான அத்தாட்சியாகும். மத சம்மந்தமான புரட்டுகளுக்கு மதிப்புக்குறைந்த பின்பே தந்திரக்காரர்களும் சுயநலக்காரர்களும் ஏமாற்றிவயிறு வலிப்பவர்களும் இந்த அரசியல் புரட்டை இவ்வளவு ஆதிக்கத்திற்கு கொண்டு வரவேண்டியதாகிவிட்டது.

இன்றையதினம் இந்தியாவிலுள்ள மக்களில் லக்ஷத்தில் ஒருவருக்குக்கூட பூர்ண சுயேச்சை என்றால்என்ன? அதற்கு என்ன செய்யவேண்டும்? அதனால்நமக்கு என்ன பலன் உண்டு என்பன போன்ற விஷயங்கள் சிறிதும் தெரிந்திருக்காதென்றே சொல்லலாம். அதுமாத்திரமல்லாமல் பூரணசுயேச்சைத் தீர்மானம் கொண்டுவந்தவர்களும் கொண்டுவர வேண்டுமென்று நினைத்தவர்களுமே அதற்கு ஏதாவது ஒரு அர்த்தம் கற்பித்துக்கொண்டு அல்லது தங்களுக்குள்ளாகவே விளக்கிக்கொண்டுஅதைக்கொண்டுவந்தார்களா? என்றுகூட சொல்லமுடியாது. ஆனால் பூரண சுயேச்சைத் தீர்மானம் நிறைவேறியவுடன் காங்கிரசிலிருந்து ராஜினாமாக் கொடுத்த சில தேசியவாதிகளுக்காவது தெரியுமா என்று கேட்கலாம் அவர்களுக்கும் தெரியாதென்றே சொல்லுவோம். பின்னை ஏன் ராஜினாமாக் கொடுத்தார்கள். என்றால் சர்க்கார் அடக்குமுறை வந்தால் ஜெயிலுக்குப் போகவேண்டுமே என்று பயந்து சைமன் கமிஷன் கமிஷன் வந்தபோது சர்க்கார் இரண்டொருவரைப் பிடித்தவுடன் பயந்துகொண்டு காங்கிரசை ராஜினாமாக்கொடுத்து "நான்தான் ஹர்த்தால் செய்வதில்லை என்று முன்னமேயே சொல்லிவிட்டேனே"ன்று விளம்பரப் படுத்திய போது என்ன நாணயம் இருந்ததோ அந்த நாணயம் கொண்டுதான் அனேகர் இப்பொழுதும் ராஜினாமாக் கொடுத்தார்களே ஒழிய பூரண சுயேச்சையின் தத்துவம் தெரிந்து தேசிய வெறிகொண்டோ அல்லது பூரண சுயேச்சை வேண்டாமென்றோ அநுசரியல்லவென்றோ தோன்றி ராஜினாமாச் செய்தவர்கள் அல்ல.

எனவே, சுயராஜ்ஜியம் என்பதற்கு எப்படி இதுவரை அர்த்தமே இல்லாமல் இருந்ததோ அதுபோலவே இன்னும் அதைவிட மேலாகவே அர்த்தமில்லாமல்இதுசெலாவணியாய்க்கொண்டிருக்கின்றது. இந்த பூரண சுயேச்சைத் தீர்மானம் சென்னை காங்கிரசில் வந்தபோது திரு. காந்தி அதை விளையாட்டுப் பிள்ளைகள் நடவடிக்கை என்று சொல்லிவிட்டுச் சென்றார். ஆனால் 2 வருஷம் கழித்துஅந்தவார்த்தை விளையாட்டுப பிள்ளைகளிடமிருந்து"மகாத்மாக்களிடம்"சென்றுவிட்டது. இந்த இரண்டு வருஷ இடையில் பூரண சுயேச்சைக்கு எப்படி அவ்வளவு பெரிய அந்தஸ்து வந்து விட்டது என்பது "சிதம்பர" இரகசியமாய் இருக்கின்றது. அன்றியும் இன்றைய தினம் பூரண சுயேச்சை என்கின்ற வியாபாரத்திற்கு இன்றைய தினம் யார் யார் கூட்டாளிகள் என்றுபார்த்தால் 'ஜாதி மதங்களையெல்லாம்ஒழிக்கவேண்டும்' சொத்து வித்தியாசங்களையெல்லாம் ஒழிக்கவேண்டும் என்கின்ற திரு. ஜவாரிலால் நேரும் ஜாதி மத வர்ணாசிரம தர்மங்களையெல்லாம் காப்பாற்ற வேண்டும் என்கின்ற திரு. காந்தியும் முக்கியகூட்டாளிகளாவார்கள்.

இவர்களுக்கு எதிரியாக சின்ன நேருவுடன் போட்டி போட்டுக் கொண்டுஎதிர்க்கும் "இந்தஅரசாங்கத்தில் எவ்வித சம்மந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாது. பள்ளிக்கூடம், கோர்ட்டு, சட்டசபை ஆகியவைகளை பகிஷ்கரிக்கவேண்டும் என்றும் அதிகமாக பூமி சொத்து வைத்திருப்பவர்கள் இடம் உள்ள சொத்துக்கள் எல்லோருக்கும் போய்ச் சேரும்படி பார்க்கவேண்டும்" என்றும் சொல்லும் திரு. சுபாஷ் சந்திரபோசும் பெரிய நேருவிடம்போட்டி போட்டு எதிர்க்கும் அரசாங்கத்தின தயவாலேயே தங்கள் வாழ்வை நடத்திக் கொண்டு எல்லோரிடம் இருக்கும் சொத்தும் தனக்கே வந்து சேரும்படியான காரியம் நாணயமற்றமுறையில் அனுபவத்தில் செய்து கொண்டிருக்கும் திரு. சீனிவாசய்யங்காரும் பூரண சுயேச்சை வியாபாரத்திற்கு போட்டி வியாபாரக்கூட்டாளிகளாவார்கள். மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு உண்டு அதற்கு ஆதாரமான எந்த காரியங்களிலும் யாரும் பிரவேசித்து எவ்வித மாறுதலும் செய்யக்கூடாது என்று மதத்தின் பேரால் மனுதர்ம சாஸ்திரத்தின் பேரால் வாதாடும் திரு சத்தியமூர்த்தியும் அந்த மனுதர்மசாஸ்திரமே உலக வாழ்க்கைக்கு கடவுளால் அளிக்கப்பட்டது என்கின்ற திரு ராஜகோபாலாச்சாரியும் மேற்கண்ட இரண்டு வியாபாரகம் பெனிகளுக்கும் கூட்டாளிகளாவார்கள் (மற்றவர்களைப்பற்றி இப்போது சொல்லாமல் நிறுத்திவிடுகின்றோம்) இதிலிருந்தே பூரணசுயேச்சைவியாபாரம் எவ்வளவு புரட்டானது என்பதை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம் நிற்க இதற்கு இப்போது அவசரமான திட்டம் ஒன்றுஅதாவது சட்டசபை பகிஷ்காரம் இதற்கு பூரண சுயேச்சைக்கு ஓட்டுக் கொடுத்தவர்களுக்குள்ளாகவே மூன்றுவித அபிப்பிராயம். அதாவது ஒன்று சட்ட சபை பகிஷ்காரம் என்பது. இரண்டு சட்ட சபை பள்ளிக்கூடம் கோர்ட் ஆகிய மூன்றும செய்தால் தான் ஒப்புக் கொள்ளுவோம் இல்லாவிட்டால் ஒன்றும் வேண்டாம் என்பது மூன்று பகிஷ்காரம் 'எல்லாம் பார்த்து தோல்வி அடைந்தாய்விட்டது ஆதலால் பகிஷகாரமில்லாமல்இருக்கவேண்டும் என்பது.இன்னமும்இதுபோல பலதுமிருக்கலாம்எப்படி இருந்தாலும்சிலர் சட்டசபை ராஜிநாமா கொடுத்தது விட்டார்கள். என்றாலும் ராஜிநாமாவில் நூற்றுக்கு தொண்ணூறுக்கு மேல்பட்டது இரண்டு காரணங்களாலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது ஒன்று வழக்கம்போல் சட்டசபைகளுக்கு காலாவதி ஆகும்போது ராஜிநாமாவோ வெளியேற்றமோ செய்து விட்டு தேசிய வீரர்களாகி பாராட்டப்பட்டு அடுத்த தேர்தலில் அதிக ஓட்டு சம்பாதிக்கலாம்என்று நம்பிகொடுப்பதுபோல் ராஜிநாமாகொடுத்தது. இரண்டுசென்றதேர்தலின்போதுதிருசீனிவாசய்யங்கார் சுயராஜ்யக் கட்சிக்கு ஆள்கள் சேர்க்கையில்"எப்படியாவது காங்கிரசில் உத்தியோகம் ஒப்புக் கொள்ளும்படி செய்து விடுகின்றேன்" என்று ரகசியமாய் உறுதிகொடுத்ததை நம்பிபல ஆள்கள் போய் அதில் சேர்ந்தது போல் சமீபத்தில் வைசிராயுடன் ராஜி பேசி ஏதாவது ஒரு முடிவு ஏற்பட்டு நமக்கு அதிக ஓட்டு கிடைக்கும்படியும் சிரமமில்லாமல் சட்டசபைஸ்தானம்கிடைக்கும்படியும் திரு காந்தி செய்துவிடுவார் என்கின்ற ஜாடை அவரதுசிஷ்யர் காட்டியதை நம்பி ராஜினாமாக் கொடுத்து விட்டுக் காத்திருப்பது என்பது. மற்றபடி சட்ட சபை கலைக்கப்பட்ட தேதிமுதல் தங்களது ராஜினாமா அமுலுக்கு வரத்தக்கது என்பதுபோன்ற ராஜினாமாக்களைப் பற்றியும் "நான் காங்கிரசின் பேரில் வந்ததால் காங்கிரசு கட்டளையை யேற்று ராஜினாமா செய்துவிட்டு நாணயத்தைக் காப்பாற்றி தனி உரிமையில் நிற்கின்றேன்" என்பவர்களைப்பற்றியும் நாம் சொல்லித்தான் வாசகர்கள் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதாக நாம் நினைக்கவில்லை. அகவே இவ்வளவுதான் தீர்மானமானதற்கு பின் ஏற்பட்ட நிலைமையாகும். இது எப்படியோ இருக்கட்டும்.இந்ததீர்மானத்திற்கு என்னதான்அருத்தமென்று பார்க்கலாம் என்றாலோ திரு. காந்தியார் திரு. ரவீந்திரநாதருடன் பேசியதில் தனக்கு ஒரு கொள்கையும் சொல்ல முடியவில்லை என்றும் என்ன செய்வது என்பது தனக்கு சிறிதும் இன்னும் ஜாடைகூட தோன்றவில்லை என்றும் சொல்லி விட்டார். திரு. ஜவார்லால் அவர்களோ ருஷியாவிற்கு போய்விட்டு வந்தவர் என்கின்ற ஒரு அட்டலைத் தவிர வேறொரு காரியத்தையும் அவரிடம்காணமுடியவில்லைஇந்தயோக்கியதைஉள்ள இவர்கள்தான் இந்தியா அரசியலைநடத்துகின்றவர்களாகஇருக்கின்றவர்கள். இதில் திரு. காந்தியை எந்த விததிலாவது பின்பற்றலாமா என்பதிலும் அவருக்கு ஏதாவது ஒரு இயக்கத்தை நடத்த ஆற்றலுண்டா என்பதிலும் கவனம் செலுத்திப் பார்ப்போமானால் நம்மைப் பொருத்தவரையில் அதாவது அவருக்கு பரமபக்தனுகவும் சிஷ்யனுகவும்

## ஈரோடு ஆலயப் பிரவேசம்.

ஈரோடு ஆலயப்பிரவேச விஷயமாய் தமிழ் நாடு என்றும் பத்திரிகையில் சில விஷயமடம் காணப்படுகின்றது.

அது விஷமத்தனமானதாகும். ஈரோடு தேவஸ்தான கமிட்டியில் ஆலயப்பிரவேச தீர்மானம் செய்யப்பட்டது முதல் "தமிழ் நாடு" பத்திரிகை செய்து வந்த விஷமத்தனமும் பொய்ப் பிரசாரமும் நாம் அவ்வப்போது அவைகளைப் பலமாய் கண்டித்ததும் நேயர்களுக்கு நினைவிருக்கும். அத்தீர்மானம் நிறைவேறிய பின் நாம் ஊரிலில்லாத காலத்தில் நமக்கு சிறிதும் தகவல் அன்னியில சிலர் திடீரென்று ஆலயப் பிரவேசம் செய்து வீண் கலாட்டா செய்து விட்டார்கள். என்றாலும் நாம் ஊரிலிருந்து வந்து விஷயம் தெரிந்து இம்மாதிரி நம் போரால் நம்மைக்கேட்காமல் திடீரென்று கலாட்டா செய்ததைப்பற்றி கண்டித்தபோது சிலர் ஆலயப்பிரவேசத்திற்கு "நீதான் அதிகாரியா உன்னைக்கேட்டுத்தான் செய்ய வேண்டுமா எங்கள் இஷ்டப்படியே நடக்க எங்களுக்கு உரிமை உண்டு ஆதலால் அதைப்பற்றி நீ கேழ்கவேண்டியதில்லை" என்று சொன்னார்கள். இதை அனுசரித்து திரு. ஈஸ்வரனும் பத்திரிகைகளுக்கு அப்போதே ஒரு குறிப்பு அனுப்பி விட்டார். இருந்தபோதிலும் ஆலயப்பிரவேசம் செய்தவர்களைக் கவனிக்காவிட்டாலும் அக்கொள்கையைக் காபாற்றவேண்டும் என்கின்ற எண்ணத்தின மீதே நாம் கேசு விஷயத்தில் நாம் செய்யவேண்டிய காரியங்கள் எல்லாம் செய்தோம்—இந்த கேசுக்கு சுமார் நானூறு ரூபாய்கள் இதுவரை செலவாகி இருக்கின்றது. [இது திரு ஈஸ்வரன் சொன்ன கணக்குப்படி.) இவற்றுள் சுமார் நூறு ரூபாய்கள் வரை நாம் கொடுத்திருக்கிறோம். மலாய் நாட்டுக்குப் போன நமது ஏஜண்டு திரு காளியப்பன் அவர்களால் நூறு ரூபாய்களுக்கு மேலாகவே வசூல் செய்தனுப்பப்பட்டது. நமது மைத்துணர் திரு. மாப்பிள்ளை ராமசாமி ஈஸ்ரவனிடத்தில் 45 ரூபாயிக்கு மேலாகவே கொடுக்கப்பட்டதாக அவர் சொன்னார். இது தவிர இக்கேசு சம்மந்தமாய் வெளியூர்களிலிருந்து வருகின்றவர்கள் எல்லோருக்கும் ஜாகை சௌகரியம் சாப்பாடு ஆகியவைகள் நமது வீட்டிலேயே நடந்து வந்திருக்கின்றது. திருஈஸ்வரனுக்கும் அவரது சிநேகிதர்களுக்கும் கேசு ஆரம்பித்த காலம் முதல் கேசு முடிந்த நாள் வரையில் —கேசு முடிந்து பணம்கட்டி விடுதலையாகி வெளிவந்த மறு நாள் வரைசாப்பாடுநமதுவீட்டில்தான் நடந்துகொண்டு வந்தது வருகிறது "அதற்கு முன்னும் வருஷக்கணக்காய் பல வருஷங்கள் நமது வீட்டில் தான் சாப்பிட்டு வருகிறார்.' தவிரகேசுக்குஆஜரான இரண்டுமூன்றுவக்கீல்களும் யாருக்காக வந்தார்கள் என்பதையும் அவ்வக்கீல்களையே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இன்னும் இது விஷயமாக செய்த காரியங்கள் சுருக்கமாக சொல்வதானால் வக்கீல் கடைசியாக ஆர்க்குமெண்டுக்கு வந்து விட்டுப்போனதற்குக் கூட நாம் தான் மலாய் நாட்டிலிருந்து வந்ததும் முதல் வேலையாக ரயில் சார்ஜ் கொடுத்தோம். மலாய் நாட்டுக்கு புரப்படும்போதும் ரயிலேரியபின்னகடைசிவேலையாக வக்கீலுக்குரயில் சார்ஜ்கொடுத்து விட்டுத்தான் பயணம் சொல்லிக்கொண்டோம், இந்த கேசுக்கு என்று வந்திருந்ததிரு.கிரித்திவாசுக்கும்சிலசமயம்ரயில்சார்ச்கொடுத்தோம். இவர்கள் கோயில பிரவேசம் செய்யப்போகும்போதும் நமதுவீட்டில்தான் சாப்பிட்டு விட்டு போனார்கள். கோவிலுக்குள் இருந்தபோது கூட நாம் ஊரில் இல்லாவிட்டாலும் நமது மனைவியார் சாப்பாடு அனுப்பி இருக்கிறார்கள் இவ்வளவு காரியங்களையும் பெற்றுக்கொண்டும் நாம் வழக்கிற்கு விரோதமாய் நடந்து கொண்டதாகவும்யாரையும்உதவி செய்யவிடாமலும்தடுத்ததாகவும் சொல்வதற்குஎவ்வளவு தூரம் துணிந்திருக்கிறார்கள் என்பதையும், புதைப்பட்டதிருபி.வரதாராஜுலு இக்கூட்டத்தைப்பிடித்து மறுபடியும் கரையேற நினைப்பதும் எவ்வளவு யோக்கியமான காரியம்என்பதையும் வாசகர்களே தெரிந்துகொள்ளட்டும். செய்துவிட்டுச் சொல்லிக்மாட்டுவதற்கு இதை எழுதவில்லை. நமது மீது சுமத்தப்படும் பழிப்புக்கு பதில் சொல்லவேண்டி இருப்பதால் எழுதுகிறோம். ஆனால் நாம்ஒன்றுஒப்புக்கொள்ளுகின்றோம். அதாவது இக்கேசுக்கு பணம் கொடுக்கும்படி பொது ஜனங்களுக்கு எனது மனைவியின் பேரால் ஒரு அப்பீல் வெளியிட ஆரம்பித்தார்கள். அதை நான்பத்திரிகையில் போடமறுத்ததுண்டு. காரணம். கேசுக்கு அதிக பணச்சிலவில்லை. ஏனெனில் சாப்பாடு நம்முடையது வக்கீல்களுக்கு பீசு கிடையாது சார்ஜ சத்தமும்ஸ்டாம்பும் தான்வேண்டியது. இதற்கு அதிகமாம பணம் தண்ட வேண்டியதில்லை. நம்மை கேட்டபோதெல்லாம்மேல்கண்டபடி ஒரு தடவை கூட இல்லைஎன்றுசொல்லாமலபணம்கொடுத்திருக்கின்றோம்அடிக்கடி பொதுஜனங்களை பணம் கேட்பதால் கொள்கையில் அபிமானம் குறைந்து விடும் என்று சொல்லியே நமது பேரை உபயோகிக்க வேண்டாம் என்று சொன்னோம், மற்ற காரணங்களையும் மற்றும் இப்படி ஒரு கூட்டம் பொருப்பில்லாமல் நடந்து கொள்வதால் நமக்கு அடிக்கடி ஏற்பட்டு வந்த இடையூறுகளையும் நஷ்டங்களையும் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு வந்த நமது சகிப்புத்தன்மையும் பின்னால் விவரமாய் எழுதுகிறோம். ஆனால் ஒன்று. இன்றையதினம் வெகுவீரமாய் ஈரோடு ஆலயப் பிரவேசத்தைப்பற்றிஎழுதும்தமிழ்நாடுதிரு.பி. வாதராஜுலு திரு. ஈஸ்வரனைப்பாராட்டி-ஒருதந்திகொடுத்து ஏமாத்தினதல்லாமல் ஒரு காதொடிந்த ஊசி அளவு உதவி செய்தாராஎன்றுவதுஇது மாத்திரமல்லாமல் வேறு எந்த சத்தியாக்கிரகத்திலாவது கை யெழுத்தும் வாக்குத்தத்தமும்செய்து நாணயமாய்நின்றுஅதைநிறைவேற்றுமல் ஏமாற்றிவிட்டுநடுசந்தர்ப்பத்தில்விட்டுவிட்டுஓடின நடவடிக்கைகள் ஒன்றுக்கு மேல்பட்ட தடவை இல்லையா என்றுவதுநினைத்துப்பார்த்தால் இவ்வளவு விஷமத்தனம் செய்ய வெட்கப்படுவாரென்றே சொல்லுவோம்.

---

இருந்த அனுபவத்தைக் கொண்டவரையில மேல்கண்ட இரண்டு விஷயத்திலும் அவரிடம் நமக்கு நம்பிக்கை கிடையாது என்று தான் சொல்லவேண்டும். ஏனெனில் முதலாவதாக அவர் ராமராஜ்யத்தைத் விரும்புபர். அதாவது ஒவ்வொரு மனிதும் அவனவன் பிறவிக்கு உரித்தான தொழிலேயே செய்யவேண்டும் என்பவர். தவிர ஆயிரம் வருஷத்திற்கு முன் மக்கள் இருந்த நாகரீக நிலைமைக்கு போகவேண்டும் என்பவர். புதிய ஆராய்ச்சி உலகம் இன்னது என்பதைப்பற்றி கவலையேஇல்லாமலிருப்பதவர் இரண்டாவதாக மண்குதிரையை நம்பினதுபோல் நடுத்தூக்கில் விட்டு விட்டு ஓடிப் போகின்றவர் இந்த இரண்டு காரியமுமே. அவரைப் பின்பற்றுவதற்கு அனுகூலமில்லாதது என்போம். ஆனால் அவரிடம் பணம் உள்ளவரையிலும் அவருக்குப் பணம் வசூல் செய்ய சக்தியும் வழியும் சௌகரியமும் இருக்கும் வரையிலும் அவர் பெயரைச்சொன்னால்ஒட்டும் செல்வாக்கும்கிடைக்கும்என்கின்ற மயக்கமுள்ளவரையிலும்அவருக் சிஷ்யர்களும் பின்பற்றுகின்றவர்களும் இருந்துதான் தீருவார்கள். அதைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. ஏனெனில் மோசமும் விவசாரமும் சிறந்து விளக்கும் இடக்கள் புண்ணிய ஸ்தலங்களாகவும் பித்தலாட்டங்களும் ஆயோக்கியத்தனங்களும் கூடா ஒழுக்கங்கள் என்பவைகளும்தலைசிறந்துவிளங்கும்நபர்கள் ஆச்சார்ய சுவாமிகளாகவும் மடாதிபதிகளாகவும் விளங்கி சிஷ்யர்களையும் பின் பற்றுபவர்களையும் ஏராளமாகக் கொண்டு பணம் ஏராளமாய் வசூலிக்கும் சக்தி இருக்கும்போது திரு. காந்திக்கு அவ்வித அனுகூலங்கள் இருப்பதில் யாரும் ஆச்சரியப்படவேண்டியதில்லை என்று சொல்லவேண்டும். [தொடரும்.]

---

### செங்கல்பட்டு ஜில்லா போர்டு தேர்தல்.

செங்கல்பட்டு ஜில்லாபோர்டுக்கு 30—1—29-தேதியில் தலைவர் தேர்தல் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் தேர்தல் அடுத்த மார்ச்சு மாதம் 31-தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டதாக ஒரு சேதியும், தேர்தல் நடந்து ராவ்சாகிப் திரு. ஜெயராம் நாயுடு அவர்கள் தலைவராக தேர்தல் ஆகிவிட்டதாக ஒரு சேதியும் கிடைத்திருக்கின்றது. எபபடியானாலும் தேர்தல் முடிவு நமது உண்மை நண்பர்களான திரு. திவான்பகதூர் எம். கே. ரெட்டியாருக்காவது அல்லது திரு. ராவ்சாகிப் சி. ஜெயராம் நாயுடுகாருக்காவது ஆகாமல் அதற்கு விரோதமாய் வெளியாருக்கு அதாவது பார்ப்பன அடிமைகளுக்குப் போய்விடக் கூடாது என்பதே நமது ஆசை. இருவரும் சுயமரியாதை வீரர்களே ஆவார்கள். நிற்க நாம் கொஞ்சகாலத்திற்குமுன் "பார்ப்பனர்களும் பார்ப்பனக் கூலிகளும் அடிமைகளும் அவர்களது யோக்கியதை வெளியாகி அடங்கிப்போய் விட்டார்கள். ஆனாலும் மறுபடியும்தலைகாட்ட நமக்குள் ஏதாவது சண்டை ஏற்படவேண்டும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னபடிக்கு இச்சிறு விஷயங்களை கண்டே பார்ப்பனர்களும் அடிமைகளும் தலை நீட்ட புரப்பட்டு விட்டார்கள். ஆனாலும் ஜான் நீட்டினால் முளம் கத்தரிக்க நமக்கு சக்தி உண்டு. பழைய ஆயுதங்கள் எண்ணெ இட்டு உரையில் வைத்திருக்கின்றதே தவிர மழுங்கிப்போய் விடவில்லை. யாரும் பயப்படத்தேவையில்லை,

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

னம்பலனார், காளியப்பன், சுப்பரமணியம் முதலியவர்களால் சுயமரியாதை இயக்கம் இந்தியாவில் செய்துள்ள வேலையென்பதுபற்றி பிரசங்கம் செய்யப்பட்டு இரவு 9 மணிக்கு தலைவர் முடிவுரையுடனும் வந்தனோபசாரத்துடனும் கூட்டம் முடிவடைந்தது.

ஈப்போ 24—12—29

24—12—29 காலையில் திரு. ராமசாமியாரும் அவரைச்சேர்ந்தவர்களும் ஈப்போவிற்கு 5 மைல் தூரத்தில் உள்ள வெந்நீர் ஊற்றுக்கிணற்றிற்குச் சென்று நீராடிய பின் அன்று மத்தியானம் திரு. அய்யாரு அவர்கள் வீட்டில் உணவுகொண்டு நடுப்பகல் 1 மணிக்கு புகைவண்டி யேறிச் சிங்கப்பூருக்குப் பிரயாணமானார்கள். வழியில் இரவு 7 மணிக்குக் கோலாலம்பூரில் இறங்கி திரு ராமச்சந்திர நாயுடு அவர்கள் வீட்டில் உணவு கொண்டு மறுபடியும் ரயில் மார்க்கமாக காலை 7-30 மணிக்குச் சிங்கப்பூருக்குப் போய்க்கொண்டிருக்கையில் விடியுமட்டும் ரயில் நிற்கும் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஜனங்கள் வந்து திரளாகக் கூடிக்கொண்டு ஜே போடுவதும் திரு ராமசாமியாரையும் அவரது மனைவியாரையும் தூக்கத்தை விட்டு எழுப்பி வண்டியை விட்டுக்கீழே இறக்கி கணக்கு வழக்கற்ற மாலைகள் போடுவதும் கூடை கூடையாய் ஆரஞ்சி ஆப்பிள் திராட்சை மங்குஸ்தான் முதலிய பழங்கள் வண்டியில் கொட்டுவதும் காப்பி உப்புமா பிட்டாய் முதலிய பலகாரங்கள், கொடுப்பதுமாகிய அமர்க்களங்கள் செய்த வண்ணமாகவே இருந்தார்கள் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ரயில் குறிப்பிட்ட நேரத்திற்குமேல் நின்று நேரம் கழித்தே புறப்பட்டுக்கொண்டிருந்தது.

சிங்கப்பூர். 25—12—29

பிறகு 25-12-29 தேதி காலை 7 மணிக்கு மெயில் வண்டி சிங்கப்பூர் ஸ்டேஷனை அடைந்ததும் பிளாட்பாரத்திலும் ஸ்டேஷனுக்கு வெளியிலுமாக சுமார் பதினாயிரம் ஜனங்களுக்கு மேலாகவே ஐரோப்பியர் ஜப்பானியர் சீனர் மலாய்க்காரர்கள் முதலியவர்களும் பஞ்சாபக்காரர்கள் மகமதியர்கள் தமிழர்கள் ஆகிய மக்களும்பாண்டு வாத்தியங்களுடன் நின்று கொண்டு கைதட்டியும் ஜே சப்தமிட்டும் பெருத்த ஆரவாரஞ் செய்தார்கள். வண்டி நின்றதும் சுமார் அரைமணி நேரம் வரை 200, 300 மாலைகள் வரை பிளாட்பாரத்திலேயே திரு. ராமசாமியார், நாகம்மாள், ராமநாதன் ஆகியவர்களுக்கு ஒவ்வொருவராகப் போட்டுப் போட்டு அறிமுகம் செய்யப்பட்டார்கள் ரயில் மேடையிலும் வெளியிலும் "ஈ. வி. ஆர் வரவேற்பு" என்று ஆங்கிலத்திலும்தமிழிலும் அச்சடித்த அட்டைகள்எங்குபார்த்தாலும் ஒட்டப்பட்டும்தோரணங்களாகக் கட்டப்பட்டும் இருந்ததுடன் ஸ்டேஷனுக்கு வெளியிலும் சுமார் 200 மோட்டார்கள் வரை இவ் வட்டைகள் கட்டப்பட்டு வரிசை வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன,

திரு. ராமசாமியாரையும் சகாக்களையும் ஸ்டேஷனை விட்டு வெளியில் அழைத்து வருவது மிகக் காரியமாகி விட்டது. வெளியில் வந்ததும் தழைகளாலும் புட்பங்களாலும் காகிதத் தோரணங்களாலும் துணிக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டதும் திரு. ராமசாமியாரின் வரவேற்புக்கென்றே புதிதாக வாங்கினதுமான ஒரு பெரிய மோட்டார்கார் வண்டியில் திரு. ராமசாமி, திருமதி நாகம்மாள், எஸ். ராமநாதன் ஆகியவர்களும் மற்றுமுள்ளவர்கள் வேறு வண்டிகளிலும் ஏறி நூற்றிருபது வண்டிகள் வரை வரிசையாகச் செல்லவும் திரு. ராமசாமியார் வண்டிக்கு முன்னால் அலங்கரித்த மோட்டார் டிரக்கு வண்டியில் நாற்காலிகள் போட்டு பாண்டு வாத்தியக்காரர்களும் மற்றொன்றில் மேளவாத்தியக்காரர்களும் இடையில் சாரணத் தொண்டர்கள் இருமருங்கிலும் செல்ல ஊர்வலம் சுமார் ஏழரை மணிக்குத் துவக்கப்பட்டு இடை இடையே சுத்தி மாலைகள்போடவும் கடைக் கடைகளுக்கு நிறுத்தி பன்னீர் பாட்டல்களும் செண்டு பாட்டல்களும் உடைத்து தெளிக்கவும் புட்பங்கள் கூடை கூடையாய் வாரி வாரி இறைக்கவும் பல கடைகளுக்கு முன்னால் பெரிய துணிகளில் கடைக்காரர்கள் விலாசம் எழுதப்பட்டு கீழே வரவேற்கின்றோம் என்ற வாசகங்கொண்ட கொடிகள் கட்டியும் தெரு நெடுக சுயமரியாதை ரகசியம் கொண்டவைகளிலும் பந்தல்களிலும் நிறுத்தி நிறுத்தி பிறகு பழங்கள் குவையிட்டும் முதலான காரியங்கள் நடக்கவும் மற்றொருபுறம் வண்டிக்கு முன்புறமும் கீழே விழுந்து கும்பிடுகிறவர்களையும் வண்டிக்குள் எட்டி விழுந்து தொட்டு கும்பிடுகின்றவர்களையும் சாரணர்கள் பிடித்து நிறுத்தி நிறுத்தி தடுத்து வெளிப்படுத்தும் வேலைகளும் நடந்து நடக்க வண்டி மெதுவாக ஒன்பது மணிக்கு பாப்ரோ ரோட்டில் உள்ள திரு. ராமசாமி நாடார் அவர்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்து சிற்றுண்டிக்காக அங்கு இறங்கி, பல கனவான்களுக்கு அறிமுகம் செய்வித்து எல்லோருக்கும் சிற்றுண்டி அளித்து சந்தனம், பன்னீர், கல்கண்டு வழங்கி ஒரு சிறிய சொற்பொழிவு நிகழ்த்தி மறுபடியும் மோட்டாரில் வைத்து முன்போலவே ஊர்வலமாக அழைத்து திலக்ரோட்டில் இதற்கென்றே ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள மேற்படி திரு. ஓ. ராமசாமி நாடார் பங்களாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு இறங்கியவுடன் பலருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டு பிறகு பல பத்திரிகை நிருபர்கள்தனித்தனியே பேட்டி கண்டு பேசி [illegible] கூறிப்போனார்கள். பகலில் விருந்து [illegible] சுமார் 200, 300 பேர்களுக்குமேலாகவே நடந்தது. அது முடிந்தவுடன் நியூஹால்ட் என்னும் ஒரு பிரபல நாடகக் கொட்டகையில் திரு. ஓ. ராமசாமி நாடார் அவர்கள் தலைமையில் எல்லா வகுப்பார்களும் சேர்ந்த சிங்கப்பூர் வாசிகளால் ஒரு வரவேற்பளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி அங்கு செல்லப்பட்டது. ஹாலுக்குள் மூச்சு விடக்கூட இடமில்லாமல் ஜனங்கள் ஏற்கனவே நிறைந்து விட்டபடியால் யாதொரு வேலையும் செய்யச் சாத்தியப்படாமல் போய்விட்டதால் பதினைந்து நிமிஷத்திற்குள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வரவேற்புப் பத்திரங்களும் [illegible] சங்கத்தாரால் ஒரு வரவேற்புப் பத்திரமும் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பல மாலைகள் போடப்பட்டது. இது முடிந்தவுடன் [illegible] வாத்தியார்கள் சார்பாக திரு. ரத்தினசாமி அவர்களால் திரு. ராமசாமியாருக்கு ஒரு கைத் தடியும் கைக் கடியாரமும் திரு. ராமநாதனுக்கு ஒரு பவுண்டன்பேனாவும் வழங்கப்பட்டது. இவைகளைப் பெற்றுக்கொண்டு இரண்டே வார்த்தைகளில் இருவரும் நன்றி சொல்லிவிட்டுஉடனே கூட்டத்தைகலைத்துவெகு சிலவிட்டார்கள். ஏனெனில் கூட்டம் கிரகிக்கமுடியாத அவ்வளவு பெரிதாகவும் நெருக்கமாகவும் ஆகிவிட்டது. பிறகு மாலை 5-மணிக்கு அலெக்சாண்ட்ரா தியேட்டரில் சிங்கப்பூர் சுயமரியாதைத் தொண்டர்கள் சங்கத்தின் பேரால் ஒருவரவேற்புச் செய்திருந்தபடி அங்கு சென்றதில் அங்கும் ஏராளமான ஜனங்கள் சுமார் ஆறு, ஏழாயிரம் பேருக்கு மேலாகவே கூடி இருந்தார்கள்.

அக்கூட்டத்தில் ஜேஒலி மத்தியில் அக்கிராசனம் வகிக்க தொண்டர் சங்கத்தாரால் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தபின் திரு. ராமசாமியாருக்கு ஒரு வெள்ளி கோப்பையும் ஸ்ரீமதி நாகம்மாளுக்கு ஒரு சிறு வெள்ளிக்கூடு வெள்ளிப் பார்வைக்கண்ணாடியும் கொடுத்தார்கள் பிறகு திரு. ராமசாமியார் இரண்டு மணி நேரம் வரையில் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைப் பற்றியும் திரு. ராமநாதன் ஆங்கிலத்தில் ஒரு மணி நேரம் அறிவு இயக்கம் என்பது பற்றியும் பிரசங்கம் செய்தார்கள் இப்பிரசங்கத்தில் ஜனங்கள் செய்த ஆரவாரத்திற்கு அளவே இல்லை பிறகு தலைவர் முடிவுரை சொன்னவுடன் முன்னேற்றம் பத்திராதிபர் உயர்திரு சாரங்கபாணி அயர்களால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு கூட்டம் 8-30 மணிக்குக் கலைந்தது பிறகு திரு ராமசாமி நாடார் அவர்கள் பங்களாவுக்குச் சென்று தங்கியிருந்தார்கள்.

26—12—29

மலேயா இந்திய சங்க மகாநாடு,

மறுநாள் காலையில் திரு ராமசாமியாரும் திரு ராமநாதனும் சிங்கப்பூர் டவுன் ஹாலில் ஜனாப் அப்துல் காதர் அவர்கள் தலைமையில் நடந்து கொண்டிருந்த மலேயா இந்தியன் சோசியேஷன் மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டு அங்கு மலாய்நாட்டைப் பற்றியும் மதுவிலக்கைப் பற்றியும் ஒரு உபந்நியாசம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டபடி திரு. ராமசாமியார் ஒரு உபந்யாசம் செய்தார். அதன் சுருக்கமாவது:—

தான் மலேயா நாட்டிற்கு வந்து ஒரு வாரமே ஆகின்றபடியாலும் இரண்டு மூன்று ஊர்களே பார்த்திருக்கின்றபடியாலும் அதற்குள் மலேயா நாட்டைப் பற்றி ஒன்றும்சொல்ல முடியாதென்றும், மதுவிலக்கைப்பற்றியும் இம்மகாநாட்டைப் பற்றியும் [illegible] சொல்லி மதுவிலக்கு என்பது இன்றைய நிலைமையில் இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் சுலபத்தில் விலக்கு செய்யக் கூடியதல்லவென்றும், இவர்களிடம் கடவுள் மூலமாகவும் மதக் கொள்கை மூலமாகவும் மது புகுந்திருக்கின்றதென்றும் அவ்விரண்டு அபிப்பிராயமும் தளர்த்தப்படாவரையில் பொதுவாக பூரண மதுவிலக்கு முடியாதென்றும் சிறப்பாக நூற்றுக்குத் தொண்ணூறு மக்களாகிய பாமர மக்களுக்குள் இதுகூட முடியாதென்றும் இந்துக்களுடைய கடவுள்களில் பாமர மக்கள் கடவுள்களாகிய முருகன் காட்டேரி கருப்பன் வீரன் முனியாண்டி காளி பராசக்தி முதலாகிய கடவுள்களும் மற்றும் பல பார்ப்பன கடவுள்களும் யாகம் சாந்தி முதலிய வைதிகச் சடங்குகளுக்கு வழிபடும் இந்துக்களில் மதுவை கட்டாய வஸ்துவாக கொண்டிருக்கின்றது என்றும் அநேகம் பெருத்த மதுபானம் மதசம்பிரதாயத்திலும் மரியாதை சம்பிரதாயத்திலும் கட்டாய வஸ்துவாக கருதப்பட்டு வருகின்றது என்றும் அதனாலேயே தான் மதுவிலக்குக்குமிதக்குடி (டெம்பரன்ஸ்) என்றும் பேர் ஏற்பட்டதென்றும் இதில் நம்பிக்கை உள்ள சமூகத்திற்கு மதுவிலக்கு என்பது சுலபசாத்தியமல்ல என்பதே தமது அபிப்பிராயமென்றும் மலாய் நாட்டில் உள்ள தோட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கள்ளுக்கடையும் கள்ளுள் வைத்து நைவேத்தியம் செய்ய ஒவ்வொரு சாமி கோவிலும் இந்து மக்கள் சம்மதத்தின் பேரிலேயே கட்டப்பட்டிருப்பதாக கேள்விப்பட்டதாகவும் அக்கோவில்களை யெல்லாம் இடித்து அச்சாமிகளை யெல்லாம் ஒழித்தாலொழிய மதுவிலக்கைப் பற்றி பேசுவது யோக்கியமாகாதென்றும் இப்படியே அநேகமான ஒழுக்கமற்ற காரியங்கள் மதத்தின் பேராலும் சாமியின் பேராலும் மக்களுள் புகுத்தப்பட்டிருக்கிறதென்றும் அதனாலேயே தான் நமது ஒழுக்கமும் முன்னேற்றமும் தடைப்பட்டு வருகின்றதென்றும் ஆதலால் அதை ஒழிக்கவேண்டுமென்றும் முதலில் அதற்கு அஸ்திவாரத்தைக் கண்டுபிடித்து அது எதுவானாலும் அதை இடித்தெறியத் தயாராக வேண்டுமென்றும் சொல்லி மகாநாடு விஷயத்தில் ஏதோ தன் அனுபோகத்தை தெரிவிப்பதாக சொல்லி பேசியதாவது:—

சகோதரர்களே!

இன்று இங்கு நடந்த மகாநாட்டு நடவடிக்கையைப் பார்த்தேன். இது எங்கள் நாட்டில் காங்கிரசின் ஆரம்ப கால நடவடிக்கைகளை ஒத்திருக்கின்றது. அதாவது இந்தியப் பொது மக்களுடையவும் பாமரமக்களுடையவும நன்மைக்காகவென்று தான் ஆதியில் காங்கிரசு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இதை ஆரம்பித்தவர்களில் அரசாங்கஉத்தியோகத்தை நம்பி ஆங்கிலம் படித்து விட்டு உத்தியோகத்திற்கும் தங்கள் சொந்த வயிற்றுப் பிழைப்புக்கும் வகை எதிர்பார்த்த மக்களே முதன்மையாயிருந்தார்கள், அம் மகாநாடுகளில் தங்கள் உத்தியோகத்திற்கேற்ற பல தீர்மானங்கள் செய்து விட்டு பாமரமக்களை ஏமாற்ற ரோட்டுகள்போடவேண்டும், வரிகுறைக்கவேண்டும், காடு திருத்தவேண்டும் என்பதுபோன்ற சில காகிதத் தீர்மானத்தையும் செய்வார்கள். காரியத்தில் சீர்திருத்தம் என்னும் பேரால் கொழுத்த சம்பளமுள்ள சில உத்தியோகங்களை அந்த படித்த கூட்டத்தினர் அனுபவிக்கவும் அதற்காகவரிகள் உயர்த்தவும் நேர்ந்ததைத்தவிர அதற்குத் தகுந்தபடிவரிகளும் உத்தியோகங்களும் அரசாங்க அதிகாரங்களும் மற்றும் தொல்லைகளும் பெருகினதைத் தவிரவும் வேறுயாதொருபலனும் ஏற்படவில்லை என்றும்.

சம்பளமும் உத்தியோகமும் பெருகினதின் காரணமாய் கட்சிகளும் உட்பிரிவுகளும் ஏற்படவேண்டியதாகிவிட்டது. ஏனென்றால் ஸ்தாபனங்களில் முக்கியஸ்தர்களாயிருக்கின்றவர்கள் அதனால் ஏற்படும் உத்தியோகங்கள் எல்லாம் தாங்களே சுயமாக அனுபவிக்க ஆசைப்படுவதாலும் மற்றவர்களுக்கு பங்கு கொடுக்காமல் ஏமாற்ற சூழ்ச்சி செய்வதாலும் மற்றவர்கள்பிரிந்துபோய் வேறு ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக்கொண்டு தாங்கள் தலைவர்களாவதும் பிரகு அதுபோலவே அதிலிருந்து பலர் பிரிந்து போவதும் சாத்தியப்படாதவர்கள் சாதி மத வகுப்புகளின் பேரால் ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொண்டு பாத்தியம் கேட்பதுமாகிய நிலைமைஏற்பட்டுவிட்டது என்றும் எங்கள்நாட்டில் உள்ள இவ்வளவு ஆசியல் மதஇயல் ஜாதி வகுப்பு இயல் சமூக இயல் ஆகியவைகளின் பேரால் ஏற்பட்டதான கட்சிகளும் ஸ்தாபனங்களும் காங்கிரசு ஏற்பட்டதினாலும் அதிலுள்ளவர்களின் சுயநல சூட்சியாலும் அவர்களைப் பின்பற்றியும் ஏற்பட்டதே ஒழிய வேறில்லை ஆகையால் இந்த மகாநாடு எங்கள் நாட்டு காங்கிரசைப் பின்பற்றாமல் அரசாங்கத்தாரை உத்தியோகமும் பதவியும் கேட்காமல் நாட்டின் நலனுக்கும் பொதுமக்கள் நன்மைக்குமான முறையில் ஆட்சி செலுத்தும்படி அவர்களைக் கட்டாயப் படுத்தும்படியான மாதிரியில் நடந்து கொள்ள வேண்டும். அதற்கு மார்க்கம் மக்களை ஒன்று படுத்தி அவர்களுக்கு அறிவையும் சுயமரியாதையையும் உண்டாக்குவதே தவிர உத்தியோகங்களை இந்திய மயமாக்கவேண்டுமென்பதல்லஎன்பதே எனதபிப்பிராயம் என்றும் இந்தியர்கள் என்பவர்களாகிய நாம் ஒரு மதம் ஒரு ஜாதி ஒரு வகுப்பு ஒரு கொள்கை ஒரு லட்சியம் என்று சொல்லிக் கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. முதலாவது லட்சியத்தை ஒன்று படுத்திக் கொண்டாலொழிய ஒரு காரியமும் செய்ய முடியாது ஆதலால் நீங்கள் எதாவது எங்கள் காங்கிரசைப் பின்பற்றி எங்கு இந்த நாட்டையும் இந்தியாவைப்போல பாழாக்கி ஏழைகளை வதைத்து இனி இங்கிருக்கும்ஏழைகளுக்கும் தொல்லை விளைவித்து அவர்கள் இங்கிருந்து இனிவேறுவெளிநாட்டுக்குஅனுப்பிவிடுவீர்களோஎன்றுபயப்படுகிறேன்என்றும்சொன்னார். மேடையில் இருந்த சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் சபாஷ் சபாஷ் உண்மை உண்மை என்று கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். ஆனரபிள் வீராசாமி அவர்கள் திரு. ராமசாமியாரின் கையைப் பிடித்து நாங்கள் பயப்படவேண்டியதில்லை என்று உறுதி கூறுகின்றோம் என்பதாகச் சொன்னார். பிரகு மகாநாட்டுக் காரியதரிசி திரு. நாராயண அய்யர் எழுந்து திரு. ராமசாமியாருக்கு வந்தனம் கூறுவதாகத் தீர்மானித்தார். பிறகு மகாநாடு இனிது கலைந்தது

பிரகு திரு. நாடார் அவர்கள் பங்களாவில் ஒரு பிரபல பகல் விருந்து நடந்தவுடன் சுமார் நாலரை மணிக்கு சிங்கப்பூர் மெக்கிகார் ரோட்டிலுள்ள டிராம்வே கொட்டகையை அடுத்துள்ள மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று. அதற்கு இதுவரையில் சிங்கப்பூரில் எப்போதும் எங்கும் கூடியிராத அளவு ஜனங்கள் வந்து கூடி விட்டார்கள். பெண்களும் ஏராளமாய் வந்து இருந்தார்கள். கூட்டத்திற்கு திரு, அதிசயம் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். திரு. ராமநாதன் அவர்கள் அறிவு இயக்கம் என்பதுபற்றிமுதலில்பேசினார். பிரகு திரு. ராமசாமியார் செங்கல்பட்டு தீர்மானங்கள் என்பதுபற்றி இரண்டு மணி நேரம் பேசினார், பிரகு சாமி சிதம்பானார். பொன்னம்பலனார் ஆகியவர்கள் புராணங்கள் அவதாரங்கள் என்பதுபற்றி பேசினார்கள். அன்று இரவு பலர் ஜாகைக்கு வந்து இரவு ஒருமணி வரைபேசிவிட்டுப் போனார்கள்.

## 27—12—29

27—12—29 உ காலை எட்டு மணிக்கு முன் ஏற்பாடு செய்திருந்த எல்லோருமாக சிங்கப்பூருக்கு அடுத்த ஜோகூர்பார் என்னும் ஊருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அது ஒரு மகமதிய சுல்தான் அரசரால் ஆளப்படும்தேசம்ஜோகூர்பார் அடைந்ததும் அவ்வூர்பொதுமக்களால்காலை ஆகாரம் விமரிசையாய் அளிக்கப்பட்டு அவ்வூரிலுள்ள ஒரு பெரிய நாடகக் கொட்டகையில் திரு. ஏ. பி. சின்னதுரை அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று பெண்களும் ஆண்களும்கொட்டகைக்கு நெருக்கமாகவந்திருந்தார்கள் இரண்டொரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டதும் திரு ராமசாமியார் தமிழில் சுயமரியாதை இயக்கம் என்றால் என்ன என்பதாக 2 மணி நேரமும் திரு. ராமநாதன் ஆங்கிலத்திலுமாக பேசிவிட்டு உடனே அங்கிருந்து சுமார் 10 மைல் தூரமுள்ள சிலேட்டார் என்னுமிடத்தில் ஏற்பாடு செய்திருக்கும் பிரிட்டிஷ் கப்பல் படை ஸ்தானத்துக்கு சென்றார்கள் அங்கு அந்த பிரதம அதிகாரியாலும் சீப் இஞ்சினீயராலும் சமுத்திரத்தில் இருந்தபடியேகப்பல்களை பழுதுபார்க்கும் (Floating Dock) என்னும் ஒரு பெரிய யந்திரக்கப்பலையும் மற்றும் அது சம்பந்தமான வேலை இடங்களையும் காட்டி விளக்கியபின் அவர்களோடு சேர்ந்து ஒரு புகைப்படமொன்று எடுத்துவிட்டு விடைபெற்றுக் கொண்டு அதற்கு 4 மைல் தூரத்திலுள்ள ஆகாயவிமானப பயிற்சி ஸ்தானத்துக்குசென்று அங்கு எல்லாவற்றையும் பார்த்துவிட்டு 2 மணிக்கு சிங்கப்பூர் திரும்பினார்கள். பகல்சாப்பாடு நடந்ததும் சில தனித்தனி சங்கத்தார்களுக்கும் முக்கியஸ்தர்களுக்கும் பேட்டி அளித்து விட்டு மாலை 5 மணிக்கு திரு ராமசாமி நாடாரால் ஒரு பெரிய டிபார்ட்டி நடத்தப்பட்டது அவ்விருந்துக்கு சிங்கப்பூர் அதிகாரிகள் பெரிய மனிதர்கள் மற்றும் மலாய் நாட்டிலுள்ள அனேக பிரபலஸ்தர்கள்முதலியவர்கள் அழைக்கப்பட்டு மழையாயிருந்தும் சுமார் 500 பேர்கள் வரையில் வந்திருந்தார்கள். இந்த (இந்த டீபார்ட்டிக்கு 500 வெள்ளி அதாவது 750 ரூபாய்க்கு மேல் செலவு செய்தார்கள்) டீபார்ட்டியானது ஒரு நபருக்கு ஒன்றரை வெள்ளி அதாவது 2—0—0 ரூ. வீதம் செலவு செய்து நடத்தப்பட்டதாகும். சிற்றுண்டி முடிந்ததும் திரு. தாமோதரம் அவர்களால் அரிமுகம் செய்து வந்தனம் சொல்லப்பட்டது. அதற்கு பதிலாக திரு. ராமசாமியார் நன்றி செலுத்தினார்.

பிறகு மாலை 6மணிக்கு சிங்கப்பூர் டவுன் ஆலில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஜனங்கள் மண்டபத்தின் நான்கு அந்தஸ்துக்களும் (மாடிகளும்) நிறைந்து வெளியில் அநேகம் பேர் நின்றுகொண்டிருந்தார்கள். அக்கூட்டத்திற்கு சிங்கப்பூர் பிரபலரான திரு. பார்ஸ்டன் என்னும் ஆங்கில கனவான் தலைமை வகித்தார். அங்கும் பல உபசாரப் பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டன. திரு. ராமசாமியார் "சுயமரியாதை இயக்கம்" தோன்றவேண்டிய அவசியம் என்ன? என்பதைப்பற்றி நீண்ட நேரம் பேசினார். பேசும்போது திருமதி மேயோ எழுதியிருப்பதைப்பற்றி பிரஸ்தாபித்தார். கூட்டத்தில் ஒருவர் மேயோ எழுதியதின் கருத்து என்ன என்று கேட்டார். திரு. ராமசாமியார்கருத்துஎன்னஎன்பதை நாம் பிரகு கவனிப்போம். அந்தம்மாள் எழுதியி இருப்பவைகள் உண்மையா பொய்யா என்று நாம் முதலில் பார்க்கவேண்டும் என்றார். திரு. காந்தி அந்தம்மாளை சாக்கடைப் பரிசோதனை என்று சொல்லியிருக்கிறாரே என்றார். அதற்கு திரு. ராமசாமியார் திரு. காந்தி சாக்கடைப் பரிசோதனை என்று சொன்னது உண்மையாயிருந்தாலும் சாக்கடை இல்லாத இடத்தையாவது சிங்காரவனத்தையாவது கட்டி அதைப்பார்க்கச் சொல்ல அந்தம்மாளை கூப்பிட்டிருக்கலாம். அந்தப்படி காட்டுவதற்கு அவருக்கு ஆதாரம் இல்லாததால் அவர் இந்தியர்களைப் பார்த்து ஸ்ரீமதி மேயோ எழுதிய புஸ்தகத்தை மறந்துவிடாமல் எப்போதும் ஒருபக்கத்தில் வைத்திருங்கள் என்று சொல்லியிருக்கிறார். என்று சொன்னார். அதற்கு அவர் வேறு பலர் மறுப்பு எழுதி இருக்கிறார்கள் என்றார். அதற்கு திரு. ராமசாமியார் ஒருவராவது ஸ்ரீமதி மேயோ சொன்னவற்றை முழுதும் மறுக்கவில்லை யென்றும் ஆனால் திருமதி மேயோ நாட்டிலும் இவ்விதம் இல்லையா யென்றும் தான் எழுதி இருக்கின்றார்கள் யென்றும் உண்மை தெரியவேண்டுமானால் மேயோ கூற்று மெய்யா பொய்யா என்ற புஸ்தகத்தை வாங்கிப் படித்துப்பாருங்கள் என்றும் சொன்னார். பிரகு துடர்ந்து பேசுகையில் ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லி இது பொய்யா இது மெய்யா என்று கேட்டுக் கொண்டே பேசினார். பிரகு திரு. ராமநாதன் ஆங்கிலத்தில் பேசினார். தலைவர் ஆங்கிலத்தில் முடிவுரை சொன்னவுடன் உபன்யாசகர்களுக்கு நன்றி செலுத்தி கூட்டத்தை முடித்தார். அன்று இரவை ஜாகையில் கழித்து மறுநாள்

## 28—12—29

28—12—29 உ காலை சிற்றுண்டி நடந்ததும் பங்களாவிலேயே பல ஸ்தாபனக்காரர்கள் தனித் தனியாக புகைப்படமெடுத்த பிறகு அடுத்த ஊராகிய பதுபகாரிலிருந்து அழைத்துப்போக வந்திருக்கும் நண்பர்களுடன் மோட்டார்கார்களில் பத்துபகாருக்கு பயணப்பட்டார்கள். சிங்கப்பூரை விட்டுப் திரு. ராமசமிமார் கோஷ்டியுடன் புறப்படுகையில்கடை வீதியில் சிலர் நிறுத்தி நிறுத்தி புகைப்படமெடுத்தார்கள். பத்துபஹாகார் அடைந்ததும் பலர் ஊர்வலங்களில் புகைப்படமெடுத்து அவ்வூர் பிரமுகர்களால் திரு பழனியா அவர்கள் தலைமையில் வரவேற்கப்பட்டு மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக மிகவும் ஆடம்பரமாகஅலங்கரிக்கப்பட்டு இருந்த சீனர்களின்பொதுக் கட்டடத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். அங்கிருந்து நாட்டுக்கோட்டை • நகரத்தாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு பலமானவிருந்து நடந்தது பின்னர் பல தோட்டத்தில் வேலை செய்யும் இந்தியக்கூலிகளுக்கு சொல்லியனுப்பி அவர்களுடைய சவுகரியங்களைப் பற்றியும் விசாரித்து பலரிடம் வாக்குமூலம் வாங்கப்பட்டது. பின்னர் மாலை 4-30 மணிக்கு சினிமா கொட்கையில் ஒரு பொதுக்

கூட்டம் கூடப்பட்டது அக்கூட்டத்திற்கு திருவாளர் துபாஷ் கந்தசாமி அவர்கள் தலைமை வகித்தார் இலங்கை இந்தியர் சங்கத்தாரால் தமிழிலும் ஆதிதிராவிட சங்கத்தாரால் தமிழிலும் இரு வரவேற்பு, பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப் பட்டன திரு ராமசாமியார் அவைகளுக்கு பதில் சொல்லிவிட்டு கோவில் கட்டுவதால் ஏற்படும் கெடுதியைப் பற்றியும் இந்தியாவைப் போலவே மலாய் நாட்டிலும் பல கோவில்கள் ஏற்பட்டு அதனால் பணங்கள் வீணாகும் விஷயங்களைப்பற்றியும் விரிவாய் 2 மணி நேரம் பேசினார் திரு. ராமநாதன் ஆங்கிலத்தில் பேசினார் இரவு 7-30 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது. அன்று இரவு சாப்பாட்டிற்கு மேல் 8-30 மணிக்கு மறுபடியும் அவ்வூர் மைதானத்தில் ஈபோ திரு அய்யாரு அவர்களின் தலைமையில் ஒருபொதுக் கூட்டம் நடந்தது அதில் திருவாளர்கள் சாமி சிதம்பரனார் பொன்னம்பலனார் ஆகியவர்கள் சுயமரியாதை இயக்கம் ஏன் புராணங்களை குற்றம் சொல்லுகின்றது என்பதுபற்றி பேசினார்கள் இரவு 12 மணிக்கு தலைவர் முடிவுரை கூறிய பின் கூட்டம் கலைந்தது.

29—12—29

மறுநாள்காலையில்திருராமசாமியாரை சகாக்களுமாக மூவாரிலிருந்து அழைத்துப்போக வந்தவர்களால் மூவாரிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டார்கள். மூவார் சேர்ந்ததும் மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு மத்தியான சாப்பாடு முடிந்த பின் மாலை நான்கு மணிக்கு அவ்வூர் தியேட்டர் ஹாலில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கு திருவாளர் பாரிஸ்டர் கே. பி. கேசவமேனன் அவர்கள் தலைமை வகித்தார். மூவார் தமிழ் மக்களால் ஒரு வரவேற்புப்பத்திரம்கொடுக்கப்பட்டது. திரு. ராமசாமி பெரியார் வரவேற்புப் பத்திரங்களுக்கு பதில் சொல்லிவிட்டு வைக்கம் சத்தியாக் கிரகத்திற்காக தன்னுடன் கூடவே ஆறுமாத தண்டனை அடைந்து திருவனந்தபுரம் சென்ரல் ஜெயில் கைதியாக இருந்த திரு. கேசவமேனன் அவர்கள் தலைமையில் இன்று பேச நேர்ந்ததற்கு இம் மலேயா நாட்டிற்கு வந்தது முதல் அடைந்த மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் மேலாக இதை கருதுவதாகவும் காங்கிரசை நாங்கள் விட்டு விட்டு சுயமரிமாதைத் தொண்டுக்கு ஏன் வந்தோமென்பதைப்பற்றி தன்னைவிட திரு. மேனன் அவர்கள் நன்றாய் சொல்லுவாரென்றும் இந்தியாவில் உள்ள சமுதாயக் கொடுமையைப்பற்றிய பார்ப்பன அக்கிரமங்களைப் பற்றியும் நகரத்தார்களின் தர்மம் நாட்டுக்கு உபயோகப்படாமல் நாட்டைக் கெடுக்க உபயோகப்படுவதை பற்றியும் விரிவாகப் பேசினார். பிரகு திரு. ராமநாதன் நகரத்தார் பெண்களைக் கொடுமைப் படுத்துவதைப்பற்றி விரிவாகப் பேசினார் அதன்பின் திரு. கே. பி. கேசவமேனன் திருவாளர்கள் இராமசாமி, இராமனாதன் ஆகியவர்களின் காங்கிரஸ தொண்டைப்பற்றி எடுத்துச் சொல்லி திரு. ராமசாமியாரின் மனைவி திருமதி நாகம்மாள் தனது கணவன் சிறையில் இருக்கையில் வைக்கத்தில் சத்தியாக்கிரகம் செய்ததையும் எடுத்துச் சொல்லி இரவு எழரை மணிக்குக் கூட்டம் முடிந்தது.

அதன்பின் இரவு சாப்பாடு கழிந்ததும் 8-மணிக்கு சிங்கப்பூர் முன்னேற்றம் பத்திராதிபர் திரு. சாரங்கபாணி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அதில் திருவாளர்கள் அய்யாரு, பொன்னம்பலனார். சிதம்பரனார் முதலியவர் பேசினார்கள். இரவு 11-மணிக்கு கூட்டம் முடிந்தது. அன்றிரவு மூவாரில் தூங்கி விட்டு மருநாள் காலை,

30—12—29.

மலாக்காவிலிருந்து அழைத்துப் போகவந்தவர்களால் திரு. ராமசாமியாரும் கோஷ்டியாரும் மூவா மக்களால் ஆடம்பரமாக வழியனுப்பப்பட்டு மலாக்காவுக்கு அழைத்துச் செல்லப் பட்டனர் அங்கு மலாக்கா சேர்ந்ததும் பொது மக்களால் எதிர்கொண்டழைக்கப்பட்டு திரு. கே. பி. கேசவ மேனன் அவர்கள் வீட்டில் ஜாகை செய்தார்கள். அன்று பகல் உணவு முடிந்ததும் திருவாளர்கள் ராமசாமியார், நாகம்மாள், ராமநாதன் ஆகியவர்கள் அங்கு மருத்துவகுல சகோதரர் ஒருவரின் சுயமரியாதை திருமணத்திற்கு சென்று திரு அய்யாரு அவர்களால் மணம் நடத்தி வைத்து ஒரு சொற்பொழிவு நடத்தி மணமக்களுடன் புகைப்படமெடுத்து மணம் முடித்து விட்டு பிரகு மாலை 5 மணிக்கு திரு. கே. பி. கேசவ மேனன் அவர்கள் வீட்டிலிருந்து மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக மலாக்கா பிரான்சிஸ்கூல் மண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். அக்கூட்டத்திற்கு பெண்களும் ஆண்களும் ஐயாயிரம் பேர்கள் வரை வந்திருந்தார்கள். அதற்கு அவ்வூர் பிரபல வியாபாரியும் செல்வந்தருமான கனம் ஜனாப் என். என். பிச்சை ஜே-பி அவர்கள் தலைமை வகித்தார்கள், மலாக்கா இந்திய சங்கத்தாரால் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்து கொடுக்கப்பட்டது. திரு. ராமசாமியார் 2 மணி நேரம் சுயமரியாதை இயக்கம் என்பதைப்பற்றி பேசினார் திரு. ராமநாதன் ஆங்கிலத்தில் பேசினார் பிரகு கனம் பிச்சை அவர்களின் ஏஜண்டான ஜனாப் இப்ராகிம் காதர் மைதீன் அவர்கள் திரு. ராமசாமியார் நாஸ்திகர் என்று இந்த ஊருக்கு நேற்று தமிழ் நேசன் பத்திராதிபரான ஒரு ஐயங்கார் நாட்டுக்கோட்டை நகரத்தாரிடம் பிரசாரம் செய்து விட்டுப் போனது தனக்கு தெரியும் என்றும் இன்று அவர் பேசியதிலிருந்து ஐயங்கார் புரட்டு வெளியாயிருக்கு மென்றும் திரு. ராமசாமியார் கடவுள் உண்டா இல்லையா என்று சொல்லுவது தனது வேலை அல்ல வென்றும், கடவுளைப்பற்றி நீ கவலைப்படாதே. ஏழை மக்களின் துன்பத்தை நிவர்த்திக்க வழி தேடு என்று தான் சொல்லுகின்றார் என்றும். இப்படிப்பட்டவர்கள் பெயரை ஆண்டவர் தனது லிஸ்டில் முதலில் எழுதிக்கொள்வார் என்றும், இதற்கு தங்கள் மார்க்கத்தில் அபூபின் ஆடம் என்றும் பெரியாரின் கதை அத்தாட்சி என்றும், திரு. ராமசாமியார் சொல்லுகிறபடி தாயுமானவர், சித்தர்கள் முதலியவர்கள் சொன்ன சில பாட்டுகளையும் குரானில் சில வாக்கியங்களையும் எடுத்துச் சொல்லி சுயமரியாதை இயக்க கொள்கை இஸ்லாத்திற்கு முரண்பட்டதல்ல வென்று பேசி எல்லோரையும் பிரமிக்கச் செய்துவிட்டார். பிறகு அக்கிராசனர் முடிவுரை சொல்லி முடித்தார் பிறகு சில நகரத்து கனவான்கள் திரு. ராமசாமியாரைப்பற்றி தங்களுடைய எண்ணம் தவறாயிருந்த தென்றும் இன்று நேரில் கேட்ட பிறகு அடியோடு மாற்றிக்கொண்டதாகவும் நேரிலேயே வந்து சொன்னார்கள். மற்றொரு சென்னை நாயுடு ஒருவர்தான் அறியாமல் 2, 3 நாளாய் கடைத்தெருவில் திரு ராமசாமியாரைப்பற்றி இதைக் கூறினதாகவும் அதற்கு ஆக வெளிப்படையாய்த் தனது வருத்தத்தை தெரிவிப்பதாகவும் சொன்னார். பிறகு அன்று இரவு திரு. கே. பி. சேகரமேனன் வீட்டில் விருந்து உண்டு 31—12—29 நாள் காலை ஆகாரமும் நடந்த பிறகுபுகைப்பட மெடுக்கப்பட்டது. தம்பனிலிருந்து அழைத்துப் போ வந்திருந்தவர்களால் திரு. ராமசாமியாரையும் கோஷ்டி யாரையும் கார்களில் அழைத்துச் செல்லப்பட்டார்கள். தம்பனில் சுயமரியாதை கோஷ்டியாரின் வருகையை முன்னிட்டு ஊர் முழுதும் கொடிகளாலும் தோரணங்களாலும் வாழை கமுகுகளாலும் வளைவுகளாலும் அலங்கரித்து இருந்தது. ஊர்பொது மக்களால் கூட்டமாக எதிர்கொண்டு மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக நகரத்தார் கடை ஜாகைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு பகல் விருந்து நடந்ததும் பல பெரியார்களுடன் பேசிக்கொண்டிருந்து விட்டு நாலரை மணிக்கு புஷ்பங்களாலும் கொடிகளாலும் தழைகளாலும் அலங்கரிக்கப்பட்ட மோட்டார் வண்டியில் திருவாளர்கள் ராமசாமியார், அவரது மனைவியார், ராமநாதன் ஆகியவர்களை உட்காரவைத்து மேளவாத்தியங்களுடன் பெருத்த கூட்டமாக அரை மைல் தூரமுள்ள அவ்வூர் பிள்ளையார் கோவிலுக்கு முன்னுள்ள மைதானத்திற்கு அழைத்துப் போனார்கள். அக்கூட்டத்திற்கு எந்தக் கூட்டத்திற்கும் வந்திராத தோட்டக்காரர்களும் ஆதி திராவிடர்களும் பெண்களும் ஏராளமாக வந்திருந்தார்கள். அதற்கு திரு. முத்தையா முதலியார் தலைமை வகித்துப் பேசுகையில் நாஸ்திகம் இந்துமதத்தில் ஒருபாகமென்றும் அதுதான் ஞான நிலையென்றும் நாஸ்திகம்தான் ஞானமும், நியாயமும் கொடுக்குமென்றும் பல மேற்கோள்களுடன் எடுத்துச்சொன்னார். பிறகு வரவேற்புப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. பிறகு திரு. ராமசாமியார் நாஸ்திகம் என்பது என்ன என்பதுபற்றி விரிவாய்ப் பேசினார், அன்று உபன்யாசம் பெரும் வேடிக்கையாகவும் இருந்தது. பெண்கள் அநேகர்கள் வந்திருந்ததால் பெண்கள் நிலையைப்பற்றியும் தீண்டாமைப்புரட்டைப்பற்றியும் பேசினார். பிறகு ராமநாதன் ஆங்கிலத்தில் பேசினார். பிறகு சிதம்பரனார் பேசினார். அக்கிராசனர் முடிவுரை கடந்தபிறகு கூட்டம் கலைந்ததானாலும். மறுபடியும் ஊர்வலமாகவே அழைத்துச் செல்லப்பட்டார்கள் எல்லோரும் ஜாகைக்குச் சென்று சாப்பிட்டபிறகு நல்ல நிலவு இருந்ததால் வெளியில் நாற்காலிபோட்டு வேடிக்கையாக பேசிக்கொண்டிருக்கும்போது, தோட்டக்காரர்கள் பலர் தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் வந்து தாங்கள் இப்போதுதான் சமாச்சாரம் கேட்டு 4. 5-மயிலிருந்து வந்ததாகச்சொல்லி வரிசையாகவிழுந்து கும்பிட ஆரம்பித்தார்கள். அப்படிச்செய்யக்கூடாதென்று தடுத்து அவர்கள் சுகதுக்கத்தைக்கேட்டு அவர்களுக்கு சில புத்திமதிகள் சொல்லிக்கொண்டிருக்கையில் ஒரு நடுத்தர வயதுடைய பெண் தனது இளம் வயதுப் பெண்ணைக் கையில் பிடித்துக்கொண்டு அதற்குக் கல்யாணமாகி 5 வருஷமாகிறது என்றும். குழந்தை பிறக்கவில்லை என்றும் சொல்லி, திடீரென விழுந்து கும்பிட்டு ஒரு குழந்தைக்கு உத்திரவுகொடுக்கவேண்டும் என்று வெகு பக்தியுடன் வரம் கேட்கின்றவளைப்போல் கேட்டாள். அங்குள்ளவர்கள் சிரித்தார்கள். திரு. ராமசாமியார் தனக்குக் கல்யாணமாகி 35 வருஷமாயிற்றென்றும், தனக்கே குழந்தை இல்லை என்றும் சொன்னவுடன் திரு. ராமசாமியார் கோஷ்டியும் மற்றும் அங்குள்ளவர்களும் வயிறு குலுங்கச்சிரித்து திரு. ராமசாமியாரைப் பார்த்து உங்கள் பிரசாரத்தின் பலன் பார்த்தீர்களா? என்று பரிகாசம் செய்தார்கள். திரு. ராமசாமியார் [illegible] இம் மாதிரி மக்களை ஆக்கிவிட்டதென்றும் இந்த எண்ணம் போகச்செய்வது கஷ்டமானாலும் அடுத்த தலைமுறையில் அடியோடு மறைந்து போகும் என்றும் சொல்லி அந்தப் பெண்களுக்கும் உங்களுக்கு இப்போதுபிள்ளை ஆசை வேண்டாமென்றும் இன்னமும் 4, 5 வருஷம் பொறுத்து ஒரு குழந்தை அல்லது இரண்டு குழந்தை மாத்திரம் பெற்றுக்கொண்டு அப்புறம் நிறுத்திவிடு என்றும் பரிகாசமாய்ச் சொன்னார் அந்தப்பெண் அதை ஒரு "தெய்வ"வாக்காகவே நினைத்து சாமி உத்திரவு அப்படியே ஆகட்டும் என்று சொன்னாள். பிறகு இப்படி கேட்பது அர்த்தமற்றதென்றும் அப்படிப்பட்ட சக்தி என்பது பொய் என்றும் சொல்லி அவர்களுக்கு நன்றாய் படியும்படி செய்தார்.

(தொடரும்)

## அகில திருவாங்கூர் சமுதாய சீர்திருத்த மகாநாடு

# தீர்மானங்கள்.

பின்பு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

1. வைஸ்ராய் லார்டு இர்வின் வெடிகுண்டு விபத்திலிருந்து அகஸ்மாத்தாய் உயிர் தப்பியதைப்பற்றி மகிழ்ச்சியடைவதுடன், இவ் வக்கிரமச் செயல் செய்த பாதகர்களை இம் மகாநாடு பலமாய்க் கண்டிக்கிறது. இது மகாநாட்டுத் தலைவரால் பிரேரேபிக்கப்பட்டு, வரவேற்புக் கமிட்டித் தலைவரால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

2. இந்துப் பொதுக் கோயில்களில் இந்துக்கள் அனைவரும் பிரவேசித்துத் தரிசனம் செய்ய உரிமையுண்டென்று இம் மகாநாடு தீர்மானிப்பதுடன், இந்தத் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவரத் தேவையான ஏற்பாடுகள் செய்ய திருவாளர்கள். பி. சிதம்பரம் பிள்ளை பி. ஏ. பி. எல். மன்னத்து பத்மநாத பிள்ளை, ஏ. சங்கரப் பிள்ளை, எம். சிவதாணு பிள்ளை, கோட்டூர் குஞ்சு கிருஷ்ண பிள்ளை. டி. கே. மாதவன், ஆர். இராமலிங்கம் ஆகியவர்களடங்கிய கமிட்டியை நியமிக்கின்றது.

3. பொதுஸ்தாபனங்களில் சாதி மத வித்தியாசமின்றி யாவருக்கும் பிரவேச உரிமை அளிக்கவேண்டுமென்று இந்திய சட்ட சபையில் ஒரு மசோதா கொண்டுவர உத்தேசித்திருக்கும் திரு, யம். ஆர். ஜெயகரை இம் மகாநாடு பாராட்டுவதோடு, திருவிதாங்கூர் சட்ட சபையிலும் இம்மாதிரி ஒரு மசோதா கொண்டுவரவேண்டுமென்று திருவிதாங்கூர் சட்டசபை அங்கத்தினர்களை இம் மகாநாடு கேட்டுக் கொள்ளுகின்றது.

4. பட்டர்கள் என்னும் பார்ப்பனர் சுயநலங் கருதுபவராகவும், சுயஜாதியபிமானிகளாகவும் இருப்பதால், அவர்களை திவான், தேவசம் கமிஷனர் முதலிய பொறுப்புடைய உத்தியோகங்களுக்கு நியமிக்கக் கூடாதென இம் மகாநாடு திருவிதாங்கூர் அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்கிறது.

(திருவாளர்கள். சுவாமிநாதபிள்ளை சிவதாணு பிள்ளை, வீரபாகு பிள்ளை அகியோர் இதை எதிர்த்தனர். முடிவில் ஓட்டுக்கு விடப்பட்டபோது 6 பேர்களே எதிர்த்ததால் தீர்மானம் நிறைவேறியது.)

5. வருணாச்சிரம தர்மத்தை ஆதரிக்கும் எந்த சங்கத்திலும் ஒருவரும் சேரக்கூடாதென்றும், சாதிவித்தியாசம் பாராட்டும் எந்தச் சடங்கிலும் எவரும் கலந்துகொள்ளக் கூடாதென்றும் இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

6. ஆலயப் பிரவேச மசோதா சட்டசபையில் கொண்டுவர அநுமதி கோரும் திரு. என். ஆர். கிருஷ்ணன் அவர்கட்கு அனுமதியளிக்கவேண்டுமென்று திருவிதாங்கூர் சட்டசபையையும், சபைத் தலைவரையும், திவானையும் இந்த மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

7. சாதி வித்தியாசங்களை ஒழிக்கும் பொருட்டு கலப்பு மணத்தையும், சமபந்தி போஜனத்தையும் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர அனைவரும் முயற்சிக்க வேண்டுமென்றும், திருவிதாங்கூர் சட்டசபையில் திரு. கே. பி. நீலகண்ட பிள்ளையவர்கள் கொண்டு வர உத்தேசித்திருக்கும் லிவில் விவாகச்சட்டத்தை யாவரும் ஆதரிக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

8. பார்ப்பனருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கக் கூடாதென்று திருவிதாங்கூர் கிரிமினல் சட்டத்திலிருக்கும் அநியாய நிபந்தனையை ஒழிக்க திருவிதாங்கூர் சட்ட சபை மெம்பர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று இம் மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

9. பார்ப்பனர்களுக்குச் சாப்பாடு போடவும், முறை ஜெபம் நடத்தவும் திருவிதாங்கூர் ராஜாங்கம், பொதுப் பணத்தைச் செலவுசெய்து பாழாக்குவதை இம்மகாநாடு கண்டிக்கிறது.

10 விதவா விவாகம் அமுலில் இல்லாத வகுப்புக்களில் விதவா விவாகத்தை அமுலுக்குக்கொணடுவர யாவரும் முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

11. கட்டாயக் கல்வியைச் சமஸ்தானம் முழுவதும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று இந்த மகாநாடு திருவிதாங்கூர் சர்க்காரை வேண்டிக் கொள்ளுகிறது.

### சொற்பெருக்கு.

28-ம் தேதி பிற்பகல் 6-மணிக்கு திரு. சொ. முருகப்பா அவர்கள் சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அவசியத்தைப் பற்றி சுமார் ஒன்றரை மணி நேரம் சொற்பெருக்கிட்டார்.

### படத் திறப்பு.

பின்னர் திரு. ஜே. எஸ், கண்ணப்பர் அவர்களால் மலையாளத்தில் பெருஞ் சீர்திருத்தங்கள் செய்து காலஞ்சென்ற ஸ்ரீ நாராயணகுருசாமியவர்களுடைய உருவப் படம் திறந்து வைக்கப்பட்டது.

---


## பாரீஸ் படுக்கரை.

### போட்டோ படங்கள்.

பாரீஸ தேசத்தில் 'உள்ள அழகிய பெண்களை போட்டோ எடுத்துத் தயாரிக்கப்பட்டது. மிக்க அழகாகவும் விதவிதமான காதல் ஊட்டும் படங்கள் பற்பல மாதிரியாக நடிக்கும் காதலைத் தந்து மனதிற்கு சந்தோஷத்தைத் தரும். ஒரு தடவை ஆர்டர் செய்துபார்த்தால் உண்மை விளங்கும், வெளி நாட்டினர் முன் பணம் அனுப்பவும். டஜன் ஆல்பத்துடன் விலை ரூ. 1—14—0

மு. கண்ணன்,
காலிவசிகரனி நிலையம்,


## சிங்காநல்லூரில் பார்ப்பன அக்கிரமம்.

கோயமுத்தூருக்கு 6 மைல் தூரத்திலுள்ள சிங்காநல்லூர் என்னும் கிராமத்திலும் அதற்கு பக்கத்தில் உள்ள இருகூர் என்னும் மற்றொரு கிராமத்திலும் உள்ள பள்ளிக் கூடங்களில் தாழ்த்தப்பட்ட மக்களை சேர்க்காமல் வெகு காலமாகவே மறுத்து வந்ததை கோயமுத்தூர் சமூகத்தொண்டு சங்கத்தார் பிரவேசித்து தகுந்த ஏற்பாடுகள் செய்து பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்ளும்படி செய்த முயர்சியைப் பார்த்து பொறுமைகொண்டசிங்காநல்லூர் பார்ப்பனர்களில் சிலர் அவ்வூர்பார்ப்பனரல்லாத போலீஸ சப்இன்ஸ்பெக்டர் ஒருவரை வசம்செய்து கொண்டு அப்பிள்ளைகளை தங்கள் தெருவழியில் நடக்கக்கூடாதென்றுதடுத்துதொல்லை விளைவித்தார்கள். இதையறிந்ததிரு கோவை ஆர்.கே.ஷண்முகம்ஏம.எல்,ஏ அவர்கள் கேள்விப்பட்டவுடன் சிங்காநல்லூர் சென்று அப்பிள்ளைகளை அந்த வீதியில் நடக்கும்படி சொல்ல அவ்வூர்பார்பபனரல்லாத சப் இன்ஸபெக்டர் ஒருவர் வந்து வேறு வழியில் நடக்கக் கூடாதா அதே வழியில் தான் நடக்க வேண்டுமா என்றும் பள்ளிக்கூடத்தில் இடம் கொடுத்தால் தெருவழி பாத்யம் கொண்டாட வந்து விட்டீர்களே என்றும் சொல்லி பார்ப்பனருக்குவக்காலத்து பேசினார், உடனே உயர்திரு ஆர். கே.ஷண்முகம்அவர்கள் கோயமுத்தூர்சென்று போலீஸ்டிப்டிசூப்பரண்டை அழைத்துக் கொண்டு போய் பக்கத்தில் இருந்து அந்த வீதியில் பிள்ளைகளை நடக்கும்படி செய்ததுடன் எந்த சப் இன்ஸ்பெக்டர் பார்ப்பனர்களுக்கு வக்காலத்து பேசினாரோ அவருக்கே டிப்டி சூப்பிரண்டெண்டைக் கொண்டு' தடுப்பவர்களை அரஸடு செய்' என்னும் உத்திரவு வழங்கச்செய்தார் இப்போது தாராளமாய் நடக்கின்றார்கள் ஆனாலும் அவ்வூர் பார்ப்பனர்கள் அவ்வூரிலுள்ள மற்ற பணக்காரர்களையும் பாமரமக்களையும் தூண்டி விட்டு மேல்கண்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொல்லை விளைவிக்கச் செய்ததில் சிலரை அரஸடு செய்ததுடன் அதுவும் நின்றுபோய் விட்டதானாலும் வேறு உபாயம் அதாவது திரு ஷண்முகம் அவர்கள் பஜனை கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்களை அழைத்துப் போகப்போகின்றார் என்று கற்பனை செய்து பழிசுமத்தி மக்களை ஏமாற்றி திரு. ஷண்முகம் அவர்களால் அந்த ஊரில் கட்டப்படும் தாலூகா எந்திரசாலை கட்டட வேலைக்கு யாரும் போகக் கூடாதென்று கட்டுமானம் செய்ய வேலைகள் எத்தனமாய் நடத்தினார்கள். இதை அறிந்த திரு. ஷண்முகம் அவர்கள் சில வேலைக்காரர்களை ஆள் விட்டு அழைத்து வந்து "பார்ப்பனர் வீதியில் தாழ்த்தப்பட்ட வகுப்பார் நடந்ததற்காக நீங்கள் கட்டுமானம் செய்து கொண்டு வேலைக்கு வராமல் இருப்பது பற்றி எனக்கு ஆட்சேபனையில்லை ஆனால் அவர்கள் அந்தவீதியிலும் நடந்து போய் அங்குள்ள பள்ளிக்கூடத்திலும் படிக்கின்றதற்காக அதே ஊர்க்காரர்களான அந்தப்பள்ளிக்கூட பார்ப்பன உபாத்தியாயர்கள் ஏன்கட்டுமானம்செய்து கொண்டு வேலைக்குப் போகாமல் இருக்கக் கூடாதுஎன்பதைப் பற்றியோசித்தீர்களா" என்றும் "பார்ப்பான் தெருவில், தீண்டப்படாதவர்கள் நடந்ததற்காக செய்யப்படும் கட்டுமானத்தால் நீங்கள் கூலி இழந்து பட்டினி கிடக்கப் போகிறீர்களே ஒழிய எந்தப் பார்ப்பனனாவது தன் வேலையை விட்டுவிட்டு சும்மா இருக்கப் போகின்றானா" என்றும் கேட்டார் உடனே வேலைக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் உணர்ச்சி வந்து பார்ப்பனக்குரும்பையும் புரட்டையும் தெரிந்து இப்போது சந்தோஷமாயிருக்கின்றார்கள் ஆனாலும் அவ்வூர் பார்ப்பனர்கள் இன்னமும் ஏதாவது குரும்பு செய்ய வழி யோசித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

ஒரு நிருபர்.

---


## கரந்தைத் தமிழ்ச் சங்க பெருநிதிச் சீட்டு.

### (Lottery)

### அறிக்கை.

சுமார் பதினையாயிரம் சீட்டுகள் வரையில் வெளியில் தங்கியிருப்பதாலும் விற்கப்பட்ட சீட்டுகள் வெளியிலிருக்கும்போது சீட்டுப் போடுவது முறையல்லவாதலாலும் குறிப்பிட்டபடி 18—1—30-ல் சீட்டுக் குலுக்குவதை நிறுத்திக் கணக்கு முடிப்பதற்கு 15—3—30 வரையில் நாள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஷை 15—3—30 க்குள் சீட்டு விற்பனை செய்பவர்கள் சீட்டுப் புத்தகங்களையும், விற்பனைத் தொகைகளையும் கணக்குடன் தவறாது அனுப்பவேண்டியது. மேற்படி நாளைக்குள், போதிய அளவு முன்னரே விற்கப்பட்ட சீட்டுகள் வந்து சேர்ந்தால், 15—3—30 லாவது, அதற்கு முன்னராவது சீட்டுக் குலுக்கப்படும். சீட்டுப் போடும் நாளை பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

நா. கந்தசாமிப் பிள்ளை,
(Retired Engineer)
சீட்டின் தலைவர்,

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நின்று அநேக விருந்துகளில் ஆகாரமளித்தார்களே. அதற்குப் பின் நான் நமது சக்ரவர்த்தியவர்கள் ஜர்மனியை ஜெயித்துப் பெரும் கீர்த்திமானாய் விளங்கு[illegible] ஸான்னித்தியம் குறையவில்லையே. இவைகளெல்லாம் மேற்பட்டவைகளல்லவோ கடவுள் அவரிடம் சிலபேர் போனால் அவருடைய ஸான்னித்தியம் கெட்டுவிடுமென்று சனாதன தருமிகள் சொல்லுகிறார்கள். விவேகமற்ற பல பக்தர்கள் நினைத்துக்கொண்டுமிருக்கிறார்கள், இவர்கள் கடவுளுடைய ஸான்னித்தியத்தை எவ்வளவு அற்பமாகவும் யோக்கியதையற்றதாகவும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை வாசகர்களே ஆலோசித்துப் பாருங்கள்.

கடவுள் சன்னிதிக்குப்போய் ஆராதனைகளை சரிவரச் செய்வதற்கு பரிசுத்தம் ஒருவனிடமிருக்க வேண்டும் சுத்தமாகவராதவனுக்குக்கடவுள் அருள் கிட்டாது என்பவைகள் உண்மையே. அதைப்பற்றிச்சுருக்கமாகஆலோசிப்போம். பரிசுத்தம் புறப்பரிசுத்தம், அகப்பரிசுத்தம், நிஜப்பரிசுத்தம்என மூன்று வகையாகச் சொல்லப்படும். ஸ்நானம் செய்தல் மடியுடுத்தல் மற்றவர்களைத் தொடாதிருத்தல் முதலியவை புறப்பரிசுத்தம். இதையே அநேகமாகப் பரிசுத்தமெனக் கொள்ளுகிறார்கள் பிரபஞ்சமனைத்துமாயும் தான் அதனுள் சிறியாரில் சிறியனாயும் இருத்தல், தேக நிலையாமை, ஆத்மாவின் பெருமை இவைகளைப் பற்றி விசாரித்து நியாயம், இரக்கம், உண்மை முதலியவைகளோடிருப்பது அகப்பரிசுத்தம். பரிசுத்தமென்றால் அது தனிமையாக வேறொன்றோடும் ஸம்பந்தப் படாதிருக்கிறதென்பது பொருள், ஆகவே பரிசுத்த மென்பதில் தனிமைகலப் பற்று நிற்றல். இந்த உட்பொருளை நோக்கில் பக்தன் உலக விஷயங்களில் மனதைக் கலைய விடாது தனிமையாகப் பரம்பொருள் ஒன்றிலேயே செலுத்துவது நிஜப்பரிசுத்தம்.

மனிதனுடைய தேகக்கழிவுகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் நவத்துவாரங்களை எந்த உயர்ந்த ஜாதிக்காரர்களும் பக்திமான்களும் தெய்வ சந்நிதிகளுக்குப் போகையில் அடைத்துக் கொண்டு போவதில்லை. எங்கும் நவத்துவாரங்கள் தேகக்கழிவுகளை வெளிப்படுத்திக்கொண்டேயிருக்கும். ஆனதால் அந்த சுத்தம்யாருக்கும் ஒன்றுபோன்றதே ஸ்நானம் செய்து மடி உடுத்திக்கொள்ளுவது யாருக்கும் செய்யக்கூடியது ஆனதால் புறப்பரிசுத்தம் எல்லாருக்கும் வரக்கூடியதே.

அகப்பரிசுத்தம் ஒரு சில உத்தமர்களுக்கே அமையும். அவர்கள் எந்த ஜாதியிலும் அமையலாம். அகபரிசுத்தம் தாழ்த்தப்பட்ட ஜாதிகளில் அமைய எதுகளிருப்பது போல கடவுளைக் காணப் பிறந்த ஜாதிகளிலும், கடவுளிடம்அதிக பாத்தியதை கொண்டாடும் ஜாதிகளிலும், கடவுளைப் பாடும் ஜாதி, கடவுளைப் பகுத்து பக்குவா[illegible]க்கும் சொல்லும் ஜாதி, கடவுள் பணத்தைச் சிலவு செய்யும் ஜாதி கடவுள் காரிய நிர்வாகப் பொருப்புகளை நடத்தும் ஜாதி, கடவுள் மந்திரங்களைச் சொல்லும் ஜாதி, கடவுளுக்கு கைங்கர்யம் செய்யப் பாத்திதையுடைய ஜாதி, முதலிய உயர்ந்த ஜாதி இந்துக்களிருக்க ஏதுக்களில்லை. தாழ்த்தப்பட்டவர்களின் ஆலயப் பிரவேசம் கடவுளின் ஸான்னித்தியத்தைக் கெடுத்துவிடுமென்று சொல்லும் சனாதன தருமிகளின் அகப் பரிசுத்தம் எல்லாருக்கும் தெரியும். அச்சபை கர்த்தாக்கள் நீண்ட நாள் வக்கீல் வேலை செய்துகொண்டு வருகிறவர்களும் சமஸ்தானத்து பென்ஷனர்களுமாம் இவர்களுடைய தொழில்களில் தன்னுடைய மனச் சாட்சியை எவ்வளவு தரம் பணத்திற்காக விற்றிருப்பார்கள். சனாதனசபையிலிருந்த மற்றவர்களோ இங்கிலீஷ்படித்து உத்தியோகமடைந்து உலக போகங்களை அனுபவித்தும் அனுபவிக்கவும் ஆசை கொண்டவர்கள். உலக ஆசையில் மனம் பற்றிக்கொண்டவனுக்கு அகப் பரிசுத்தம் அமையாது.

பொய்யென்றும், வஞ்சனை யென்றும், மோசடி யென்றும் நமது ஊர்களிலுள்ள பல கோர்ட்டுகளில் விவகாரங்கள் நடக்கின்றன. அங்குள்ள இரு கட்சிகளிலும் சனாதன தருமிகளே நிறைந்திருக்கிறார்கள். மதப்படி புனிதமான சடங்கால் பாரமார்த்திகத்திற்கு விவாகம் செய்துகொண்ட பார்ப்பான் தன் மனைவியைத் தனியாக விட்டு மலையாளத்தில் நாயர் பெண்களை சம்பந்தம் வைத்து அவளோடிருக்கிறான். இவர்கள்தான் சனாதன தரும சபைக்கு முதன்மையானவர்களும் ருத்திர யாகம் செய்கிறவர்களும் மலையாளத்தில் வருஷா வருஷம் தெலுங்கு கன்னட தேசங்களுக்கு அநேக சிறு பெண்களை வியாதிக்காரனுக்கும், குரூபிக்கும், விர்த்தாப்பியனுக்கும் விற்பவர்களும் விற்றதில் தரகு வாங்குகிறவர்களும் அந்த சனாதன தருமிகள்தான். இவர்களெல்லாம் கடவுள் சந்நிதிக்கு வந்தால் ஸான்னித்தியம் கெடாது. ஆனால் அந்த ஸான்னித்தியம்தான் என்ன? பாங்குப் பணம் சர்க்கார் பணம் முதலியவைகளை மோசம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் உயர்ந்த ஜாதிக்காரர்கள்தானே சர்க்கார் கிஸ்துப்பணமெல்லாம் கஜானாவில் கொண்டுபோய்க் கட்டுகிறவன் தலையாரி. எந்தத் தலையாரியாவது பணத்தை எடுத்துக்கொண்டு ஓடி விட்டான் என்று எந்த மணியக்காரர்களும் சொல்லமாட்டார்கள். ஜாமீன் பணம் கட்டின தலையாரி இல்லை. கோவில் மடம் முதலியவைகளில் விபசாரம், குடி, விவகாரம் முதலியவைகள் அதிகமாக விருக்கிறது. இவைகளினால் சான்னித்தியம் கெடுவதில்லை. "மனம் தெளிந்துசமாதியில் நிற்போர் மதியுடையோர் கோடியில் ஒருவர்" என்றபடி எல்லா ஜாதிகளிலும் நிஜப் பரிசுத்தம் அபூர்வம்.

தாழ்த்தப்பட்டவர்கள் குடிக்கிறார்கள். செத்த மாட்டைத் தின்கின்றார்கள் என்று சொல்லுவதை கவனிப்போம். கள் நமது பல பெரிய கோவில்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. மதுவகை வருமானம் நாலு கோடிக்கு மேற்பட்டது. இத்தனையும் தாழ்த்தப்பட்ட ஜாதியாரே குடிப்பதில்லை. உயர்ந்த ஜாதியாரால் கையாடப்படும் பீர், சாராயம், விஸ்கி, பிராண்டி, கஞ்சா, அபின் முதலியவைகளால் கெடுக்கமுடியாத சான்னித்தியத்தை கள் எப்படிக் கெடுத்துவிடும். ஆருக்கும் உபத்திரவ மில்லாத செத்தமாட்டின் மாம்சத்தை விட கன்றுக்குதவும் பால் அதனிலும் கொழுப்பையுடையதல்லவோ? செத்தமாட்டின் மாம்சத்தைவிட உயிருடைய மாட்டின் ரத்தமான பால் கெட்டால் அதனிலும் நாற்றமுடையதல்லவா? மாட்டின் மாம்சமும் அரிசியும் சேர்த்துச் சமைத்த அன்னம் நமது பிதிர்தேவதைகளுக்குத் திருப்தியைக் கொடுப்பது என்று நமது வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே. பிராண்டி, முட்டை, கோழிக்குஞ்சு சூப்பு, மாடு முதலியவையின் மாம்சசத்து மீனெண்ணெ முதலியவைகள் இப்பொழுது வைத்தியத்திற்கு சாதாரணமாக உபயோகப்படுத்திக் கொண்டுவரக்கூடியசாதன தர்மங்களாகவிருக்கின்றன. பெருமாளுக்குச் சமமானவர் என்று நாம் சொல்லும் திருப்பதி மகந்துவைக்கூட மாட்டு மாம்சம் சாப்பிடும் வெள்ளைக்கார வைத்தியரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. "ஆபத்திற்கு பாவமில்லை என்றபடி வைத்தியத்திற்குத் தோஷமில்லை. இவர்களால் சந்நிதி சான்னித்தியம் கெட்டுவிடாது" என்போமேயானால் வயிற்றிற்கு இல்லாமல் செத்தமாடு தின்பவர்களால் மட்டும் சான்னித்தியம் எப்படிக்கெட்டுவிடும்? மாட்டு மாமிசம் சாப்பிடும் வெள்ளைக்காரர்களை கிளிக்கூண்டு மண்டபம் வரையிலும் கோவில் சின்னங்களோடு அழைத்துப் போய் ஆபரண அலங்காரங்களைக் காட்டலாமா. அதில் சான்னித்தியம் கெடாதா? செத்த மாடு தின்பவர்கள் கிறிஸ்தவர்களாகவும் மகமதியர்களாகவும் மாறிவிட்டால் அவர்களால் நமக்கு எந்த சான்னித்யமும் கெடுவதில்லையே. வலியாரைக் கண்டால்தாங்குவதும் மெலிந்தாரை மரிக்கும்படியாகத் தாக்குவதும் நம்முடைய தாழ்ந்த குணமும் வெட்க உணர்ச்சியில்லாத்தன்மையும் என்பதைவிட வேறு எந்த சான்னித்யத்தால் ஞாயம் சொல்ல முடியும்? வியாசம் எழுதவேண்டிய அளவுக்கு வந்துவிட்டதால் நிறுத்திவிட்டேன்.

## மா. வே. ஷண்முகவேல் நாடார், வாசகசாலை காரைப்பேட்டை

ஸ்ரீமான் மா. வே. ஷண்முகவேல் நாடாரவர்கள்ஞாபகார்த்தவாசகசாலையின் 4-வது வருடாந்தர விழாகொண்டாடுவதற்கென, ஷை வாசகசாலையின் பொதுக்கூட்டம் 6-ம் டியில் திரு. தே. அ. ச. அய்யம்பெருமாள் நாடார் அவர்கள் தலைமையில்நடைபெற்றது. ஷை கூட்டத்தில் ஷை வருடக் கொண்டாட்ட விழாவுக்கு திரு. சௌந்திரபாண்டியர் எம். எல். ஸி. அவர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் திருவாளர்கள் ஜே. எஸ். கண்ணப்பர் எஸ். குருசாமி பி. ஏ. ரிவோல்ட் ஆசிரியர் ஸ்ரீமதி குஞ்சிதம் அம்மாள் காரைக்குடி முருகப்பா குமரன் ஆசிரியர் திருச்சி வி. ஆ. பெ. விஸ்வநாதம் நாடார்குலமித்திரன் பத்திராதிபர் சு. ஆ. முத்துநாடார் அவர்களையும் வரவழைப்பதென்றும் ஷை வருட கொண்டாட்டத்தை தை மாத முடிவிற்குள் நடத்துவதென்றும் ஏகமனதாய்த்தீர்மானிக்கப்பட்டது என்று ஷை காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

## நோட்டீஸ்.

1930-31 ம் வருஷத்திற்கு கோயமுத்தூர் முனிசிபல் சங்கத்தாருக்குச் சொந்தமான மார்க்கெட்டுகள், வண்டிப்பேட்டை முதலியவைகளின் சுங்கம் வசூலிக்கும் பாத்தியதை 1930-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 3-ம் தேதி திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கும் சுங்கக் கேட்டுகளில் சுங்கம் வசூலிக்கும் பாத்தியதையை மட்டும் 1930-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 24-ம் தேதி திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கும் கோயமுத்தூர் விக்டோரியா டவுன் ஹாலில் முனிசிபல் சங்கத்தாரின் ஸ்பெஷல் மீட்டிங்கில் ஏலம் போடப்படும்.

முனிசிபல் ஆபீஸ்,<br>
கோயமுத்தூர்<br>
20—1—1930 } (SJ)

சி. எஸ். ரத்தினசபாபதி,<br>
சேர்மன்.

## சுங்க குத்தகைகள்.

இராமநாதபுரம் ஜில்லா 1930 31-வருஷத்திய சுங்கங்களின் குத்தகைகளை 1930 ௵ பிப்ரவரி ௴ 8௳ சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மதுரையில் இராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட் போர்டு ஆபீசில் பிரசிடெண்டவர்களால் பகிரங்கமாய் ஏலம் போடப்படும்.

2. ஏல நிபந்தனைகளை இராமநாதபுரம் டிஸ்ட்ரிக்ட் போர்டாபீஸிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

[ஒப்பம்]<br>
W. P. A. சௌந்தரபாண்டியன், இராமநாதபுரம்.<br>
டிஸ்ட்ரிக்ட் போர்ட்பிரசிடெண்டு.

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

# ஜஷேபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகையான மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவீற்ற செல்வம்"

நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:- தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச் செய்யும். காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கனைவலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர்வடிதல், ஓயாத தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிப்பு, துர்க்கந்தமடித்தல் முதலிய வியாதிகள் நீங்கி தேகத்திற்குச் சுகம் உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 | தபால் சார்ஜ் வேறு.
சிறிய டின் ரூ. 1— 0—0 |

# பார்சவாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூ. 1—0—0, தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினுங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ தமிழிலோ எழுதவேண்டும். சோல்ஏஜண்டுகள் தேவை. விபரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்;
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
(14) திருநெல்வேலி ஜில்லா, [தென்னிந்தியா.]

# பேர்பெற்ற ஊதுவத்திகள்.

எங்களிடம் ஆகவர்த்தி, அம்பர்வத்தி, ஜவ்வாதுவத்தி, புனுகுவத்தி, கஸ்தூரிவத்தி, அநேக தினுசு ஊதுவத்திகள் நிரம்பவும் திடமான சரக்காய் தயார்செய்து, வியாபாரிகளுக்கு குறைவு விலையாகவே அனுப்புகிறோம். எங்கள் சரக்கு ஒரு தடவை வரவழைத்துப்பார்த்தால் பிறகு எங்கள் சரக்கை மறக்காமல் அடிக்கடி ஏராளமாய் ஆர்டர் செய்வீர்கள் என்று நம்புகிறோம். வேண்டியதற்கு உடனே எழுதுங்கள்.

விலாசம்:—

பி. கே. பாலசுந்தரம் நாயுடு அண்டு கோ,
ரங்கசாமிகோயில் தெரு,
தந்தி—'மகாவிஷ்ணு' பெங்களூர்டவுன்.

இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சிமுறையும்



விலை ரூபா 1—8—0

(தபால் சார்ஜ் வேறு)

வெளிநாட்டு ஆர்டர்களுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும்.

மோட்டார் ஸ்கூல், (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
(11) மைலாப்பூர், சென்னை

**கடவுள் கடவுளென காசைத் தொலைக்காதே**

ஏழு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்த வைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!!

முப்பு சேர்ந்த மருந்துகள்.

நீங்கள் என்றுமழியாத இளமைப்பருவத்தை அடைய வேண்டுமானால் பழனி சி. எம். சாமி

# மகா வீரிய தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக் கொப்பாவீர்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

தாதுபுஷ்டியில் நிகரற்றது. மகான் அருளால் கிடைக்கப்பட்டது. வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சூலை, முதலிய வியாதிகளும் நீங்கும். அழிந்துபோன ஆண்மையையும் இழந்த பலத்தையும் இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வயோதிகனை வாலிபனுக்கி சதா பரமானந்தத்தை கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இருப்பதால் இதன் அரிய குணத்தைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

48 நாள் பஸ்பம் ரூபா 20—0—0. 24 நாள் பஸ்பம் ரூபா 10—0—0.

## குரு அப்ரேக் செந்தூரம்- நீரழிவுக்கு.

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷயரோகமும் நீங்கும். தனுக்கற்றது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 15.

## குரு தாளக பஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 8.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேச வாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும் போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழநி, S. I.

## தமிழரசு.

### ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை.

சித்திர வர்ணப்படங்களுடன்

சென்னையிலிருந்து வெளிவருகின்றது.

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்! அறிவை வளர்க்கும். பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும். அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவர் அச்சமின்றி எடுத்து உரைக்கும்! வியாபார அனுக்கங்களை அவ்வப்போது விரிக்கும்! வைத்திய நுட்பதிட்டங்களை வகுத்துக் காட்டித் தெரிக்கும், இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

வேண்டுவோர் கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுவார்களாக:—

மாதிரி பிரதி இனாம்.

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | உள்நாடு | ரூ. | 3—0—0 |
| | வெளிநாடு | ரூ. | 4—0—0 |

தமிழரசு காரியாலயம்,
31 வைத்தியநாத முதலி வீதி, சென்னை.



## நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

### சர்: டோராப் ஜே டாட்டா. Kt.

மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ... ரூ. | 3,56,05,275, |
| வசூலான ,, | ... ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது:

"நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தை கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமை உண்டு"

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸுகளுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை.



## குடி அரசு புத்தகாலயம்.

வேதப் புரட்டை வெளியாக்கும்:—

| | | |
|---|---|---|
| ஞானசூரியன் | | (அச்சில்) |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். | ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. | ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு. | ... | 0—2—0 |
| சோதிடப் புரட்டு. | ... | 0—2—0 |

8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.



நிமிஷ நேரத்தில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறீர்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனை செய் ஆச்சரிய நிவர்த்தி!

## சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9—0—0
6 டின் விலை ரூ. 5—4—0 3 டின் விலை ரூ. 3—0—0.
F. M. S. முதலிய ஊர்களுக்கு முன்பணம் ரூ. 2—8...0.
இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.



## அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ்.

இன்ஸ்டிடியூட் நாசரேத் S. I. R.

ஸ்தாபன ஆண்டு 1920.

இளமையிற் படிக்கவில்லையென்று வருந்தவேண்டாம்.

தமிழ்வாசிகர், எழுதத்தெரிந்த 109-பேர்கள் நமது ஸ்பெஷல் மெட்ரிகுலேஷன் கோர்ஸுக்கு தபால் மூலம் படிக்க எடுக்கப்படுகிறார்கள். அவர்கள் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் சீனியர் பாஸ் செய்து காலேஜில் சேரலாம். அல்லது இங்கிலீஷ் உயர்தரப்பட்டவர்களுக்கு இங்கிலாந்து, கொழும்பு, சிங்கப்பூர்களில் வாசிக்கலாம். லோயர், ஹையர் கிரேட் உபாத்தியார்களுக்கு அதிகப் பிரயோஜனமானது. தற்சமயஞ் செய்யும் தொழிலுக்கும் உத்தியோகத்திற்கும் யாதொரு இடையூறின்றி வாசிக்கலாம். தினசரி மாணவர்கள் சேர்ந்தவண்ணமிருக்கிறார்கள். உடனே பிராஸ்பெக்டசுக்கு மூன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவும். டைரக்டர்.


"உண்மைவிளக்கம் பதிப்பகத்தில்" அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.